Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror


www.tamilmirror.lk

TUESDAY, JANUARY 25, 2022

செவ்வாய்க்கிழமை ஜனவரி 25, 2022 | ஒளி: 07 கதிர்: 214 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

இலங்கைக்கு கடன் வழங்கும் போது

## நிபந்தனை விதிக்கவேண்டும்



இலங்கைக்கு கடன் வசதி அறிவித்துள்ள இந்தியா, அதற்கான நிபந்தனைகளையும் விதிக்க வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் டொக்டர் எஸ்.ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் வாழும் தமிழர்களுக்காக 13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்திலுள்ள அதிகாரங்களை குறிப்பிட்ட காலவரையறைக்குள் வழங்க வேண்டும் என இலங்கைக்கு

தொடர்ச்சி P2

புதிய நாட்டைக் கட்டியெழுப்ப, நாம் முன்னோக்கிச் சென்று

# காட்டாட்சியை வீழ்த்த வேண்டும்

### சஜித் – சம்பிக்கவை கைகோர்க்க மனோ எம்.பி அழைப்பு

நாம் முன்னோக்கிச் சென்று, இந்தக் காட்டாட்சியை வீழ்த்த வேண்டும் எனத் தெரிவித்த தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், “அதற்கு சஜித் பிரேமதாஸவும் சம்பிக்க ரணவக்கவும் முரண்பாடுகளை மறந்து கைகோர்க்க வேண்டும்” என்றார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் அமைந்துள்ள ஊழல் எதிர்ப்பு குழு அங்கத்தவர்களை விசாரிக்கும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் நேற்று (24) சாட்சியம் அளித்து விட்டு, ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலேயே, அவர்



இவ்வாறு தெரிவித்தார்.

மனோ கணேசன் எம்பி மேலும் கூறுகையில், “வழமையாக அரசாங்கங்கள் பதவிக்கு வரும். பின்னர் அது விழும். அதையடுத்து, புதிய அரசாங்கம் பதவிக்கு வரும். அதுவும் விழும். இன்னோர் அரசாங்கம் வரும். இதுவே வழமை. ஆனால், இன்று அரசாங்கம் விழுவதற்கு முன் நாடு விழுந்து விட்டது.

“அண்டை நாடுகளிடம் கெஞ்சிக் கூத்தாடி கைமாற்று வாங்கி, மூன்று மாதங்களுக்கு ஒருமுறை, பெருங் கடன்களின் மீள் செலுத்தும் தொகையை செலுத்தி, காலத்தை ஓட்டும் நிலைமைக்கு நாடு விழுந்து விட்டது.

“புதிதாகக் கட்டி எழுப்ப வேண்டியது புதிய அரசாங்கம் என்பதை விட, புதிய நாடு என்றுதான் சொல்ல வேண்டும். ஆகவே, இன்று இந்நாட்டின் அரச எதிர்ப்பு சக்திகள் அனைத்தும் கைகோர்க்க வேண்டும். அதற்கு முன் ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாஸவும், 43ஆம் படையணி தலைவர் பாடலி சம்பிக்க ரணவக்கவும் இணைய வேண்டும்.

“இல்லை, இல்லை” என்ற கூக்குரலை விட இந்நாட்டில் இன்று எதுவும் இல்லை என்றாகி விட்டது.

தொடர்ச்சி P2

# குப்பி விளக்குடன் வந்தார் அத்தநாயக்க

### இருண்ட யுகத்துக்குள் நாட்டை தள்ளுவதாக சாடினார்



மின்வெட்டுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க, கொழும்பில் நேற்று (24) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்புக்கு குப்பி விளக்குடன் வந்திருந்தார்.

கொழும்பு, மார்க்ஸ் பெர்னாண்டோ மாவத்தையில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இந்த ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

இராணுவப் புலனாய்வாளர்களின்

# தாக்குதலில் டிப்பர் சாரதி படுகாயம்

செ.கீதாஞ்சன்



முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்று (24) அதிகாலை 03 மணியவில் வீதியால் சென்ற டிப்பரை வழிமறித்த இராணுவப் புலனாய்வாளர்கள், அதன் சாரதி மீது இருப்புக் கம்பியால் தாக்குதல் நடத்தியுள்ளார்கள்.

தொடர்ச்சி P2

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதே

## அரசாங்கத்தின் அடுத்த முன்னுரிமைப் பணி



புதிய அரசியலமைப்பை உருவாக்குவதே அரசாங்கத்தின் அடுத்த முன்னுரிமை பணி என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அலுவலகத்தில், நேற்று (24) காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இ.மி.சவுக்கு ரூ.9,300 கோடி வழங்குமாறு ஜனாதிபதி பணிப்பு



எரிபொருளுக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு 93 பில்லியன் (9,300 கோடி) ரூபாயை இலங்கை மின்சார சபைக்கு வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, திறைசேரிக்கு பணித்துள்ளார்.

மின்வெட்டை அமல்படுத்த வேண்டாம் என மின்சக்தி அமைச்சுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்ததுடன், பிரச்சினையை தீர்ப்பதற்கு தேவையான நிதியை செலுத்துமாறும் பணித்துள்ளார்.

தொடர்ச்சி P2

பஸ்களில்

## நின்று பயணித்தால் புதிய கட்டண முறை



பஸ்களில் நின்றுகொண்டு பயணிக்கும் பயணிகளுக்கு கட்டணம் வசூலிக்கும் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

புதிய திட்டம் பெரும்பாலும் இந்த வாரத்தில் நடைமுறைப்படுத்தப்படும் என பஸ் போக்குவரத்து சேவைகள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கொரோனா வைரஸ் பரவல் காரணமாக அறிமுகப்படுத்தப்பட்ட ஆசனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பயணிகளை ஏற்றிச்செல்லும் விதி, பல பஸ்களில் மீறப்படுவதாக கூறினார்.

தொடர்ச்சி P2

## ரஞ்சனுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டுடன் தொடர்புடைய இரண்டாவது வழக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதிக்கு உயர்நீதிமன்றம் ஒத்திவைத்தது.

தொடர்ச்சி P2

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்

## ஐ.நா செல்ல ஆராய்வதாக கர்தினால் அறிவிப்பு



ஈஸ்டர் தாக்குதல் வழக்கை சர்வதேச அளவில் எடுத்துச் செல்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வருவதாக கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்ஜித் தெரிவித்தார்.


எங்கள் மக்களிடமிருந்து எங்களுடைய மக்களுக்கு நீதி கிடைக்க, நாங்கள் எங்களால் முடிந்தவரை முயற்சித்தோம் எனவும் முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்தன எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

ஒமிக்ரோனை கட்டுப்படுத்தாவிடின்

## பொருளாதாரம் மேலும் சீரழியும்

### அதிக கவனம் செலுத்துமாறு ரணில் அறிவுரை



பொருளாதாரம் மேலும் சீரழிவதைத் தடுப்பதற்கு, ஒமிக்ரோன் பரவலைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று, ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொரோனா வைரஸின் ஒமிக்ரோன் மாறுபாடு வேகமாகப் பரவி வருவதாகவும் இதனால் மக்கள் பாதிக்கப்பட்டால் அவர்களால் வேலைசெய்து பொருளாதாரத்துக்கு பங்களிக்க முடியாது என்றும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2



இராஜாங்க அமைச்சரின்

## அலைபேசி அழைப்பை ஆராயக் கோரிக்கை

வா.கிருஸ்ணா, கனகராஜா சரவணன்

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் வீட்டின் முன்னால் சுட்டுக்கொல்லப்பட்ட மகாலிங்கம் பாலசுந்தரத்தின் கொலை தொடர்பில், இராஜாங்க அமைச்சரின் அலைபேசி அழைப்பு தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று,

தொடர்ச்சி P2

எரிபொருள் கப்பல்களுக்கு

## 53 மில். டொலரை விடுவிக்க அரசாங்கம் தீர்மானம்



இரண்டு எரிபொருள் கப்பல்களுக்குத் தேவையான 53 மில்லியன் டொலரை விடுவிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக மின்சக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (24) ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் கம்மன்பில மேலும் தெரிவித்ததாவது,

35,000 மெற்றிக் தொன் பெற்றோல் மற்றும் 37,500 மெற்றிக் தொன் டீசலை பெற்றுக்கொள்வதற்கே

**“ மின்சாரம் வழங்குவதற்கு தேவையான டீசல், உலை எண்ணெயைப் பெறுவதற்கு இந்தியாவிடம் இருந்து இலங்கை மின்சார சபை கடன் வசதியைப் பெறும்**

இலங்கை மத்திய வங்கியால் இந்த டொலர் விடுவிக்கப்படவுள்ளன. கப்பலிலிருந்து டீசல் பெற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில், டீசல் மற்றும் உலை எண்ணெய் மூலம் மின் உற்பத்தி நிலையங்களை இயக்க முடியும் என்று குறிப்பிட்டார்.

டீசலில் இயங்கும் வெஸ்ட் கோஸ்ட் அனல்மின் நிலையம் உலை எண்ணெயில் இயங்கும் அதே வேளையில், சப்புகஸ்கந்த அனல்மின் நிலையத்தின் செயற்பாடுகளை மீண்டும் தொடங்குவதற்கு உலை எண்ணெய் வழங்கப்படும் என்றும் அமைச்சர் கம்மன்பில தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

ஆயிரக்கணக்கான பிரச்சினைகளுக்கு

## அரசாங்கத்தின் பதில் கொரோனா



நாட்டில் உள்ள ஆயிரக்கணக்கான பிரச்சினைகளுக்கும் அரசாங்கத்தின் ஒரே பதில் கொரோனாவே என்று கூறிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, கொரோனா பேரழிவின் மத்தியிலும் எழுச்சி பெற்ற நாடுகள் இருப்பதை அரசாங்கம் மறந்துவிட்டதாகவும் கூறினார்.

தொடர்ச்சி P2

தமிழக மீனவர்களின் படகுகளை

## விற்கும் தீர்மானத்தை பரிசீலனை செய்யவும்

### கடற்றொழில் அமைச்சுக்கு செந்தில் கோரிக்கை



தமிழக மீனவர்களின் படகுகளை ஏல விற்பனைக்கு விடும் தீர்மானத்தை மனிதாபிமான அடிப்படையில் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் செந்தில் தொண்டமான், கடற்றொழில் அமைச்சிடம் விசேட கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளார்.

எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் படகுகளை எதிர்வரும் 7ஆம் திகதி ஏல விற்பனைக்கு விடப்படுவதாக கடற்றொழில் அமைச்சு அறிவித்துள்ளது. இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள விசேட அறிக்கையில் மேலும் வலியுறுத்தியுள்ளதாவது:

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் குறைந்த அளவு கடற்பரப்பு இருப்பதால் தமிழக மீனவர்கள் எல்லை தாண்டுவது முற்றிலும் அறியாத செயலாகும்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## அரசாங்கத்தின் அடுத்த முன்னுரிமைப் பணி

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இதற்காக நியமிக்கப்பட்ட குழு இன்னும் சில தினங்களில் இறுதி அறிக்கையை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவுள்ளது என்று குறிப்பிட்டார்.
அதன் பின்னர் இந்த விடயத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து புதிய அரசியலமைப்பை உருவாக்கவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

அமைச்சரொருவர் மற்றொருவரின் நோக்கம் குறித்து பகிரங்கமாக விமர்சிப்பது முறையான ஆட்சிக்கு உரிய நடவடிக்கை அல்ல என்று சுட்டிக்காட்டிய அவர், கூட்டுப் பொறுப்பு என்பது அனைத்து அரசாங்க முடிவுகளுக்கும் அரசாங்க அமைச்சர்களும் பங்குதாரர்களும் பொறுப்பேற்க வேண்டும் என்றார்.
நாளை அல்லது நாளை மறுநாள் தேர்தல் என்று சிலர் கூறுகின்றனர். அடுத்த 03 வருடங்களை சரியான முறையில் பயன்படுத்தி, நேர்மையான நடவடிக்கையை நோக்கி பயணிக்கிறோம் என தெரிவித்தார்.
ஜனாதிபதியின் சுபீட்சம் நோக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அந்த மூன்று வருடங்களில் எமக்கு போதிய வாய்ப்புகள் கிடைத்துள்ளன.
எனவே நாம் இப்போது செய்ய வேண்டியது அடுத்த 03 வருடங்களை ஒரு கூட்டு அர்ப்பணிப்புடன் பயன்படுத்துவதே ஆகும் எனவும் இந்த நோக்கத்திற்காக நம் அனைவரையும் அர்ப்பணிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## ரஞ்சனுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

இந்த வழக்கு நேற்றையதினம் (24), உயர்நீதிமன்ற நீதியரசர்களான எஸ். துரைராஜா, யசந்த கோதாகொட மற்றும் நீதியரசர் ஏ.எச்.எம்.டி. நவாஸ் ஆகியோர் அடங்கிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ரஞ்சன் ராமநாயக்கவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அஷான் பெர்னாண்டோ, ரஞ்சன் சார்பில் ஆஜராகும் ஜனாதிபதி சட்டத்தரணி அனுர மெத்தேகொட உடல்நலக்குறைவு காரணமாக நீதிமன்றில் ஆஜராக முடியாதமையை மன்றுக்கு அறிவித்தார். கம்பஹா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தற்போது சூம் தொழில்நுட்பம் மூலம் இளங்கலைப் பட்டப்படிப்பைப் படித்து வருவதாக மன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக குற்றவாளியாக இனங்காணப்பட்ட ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 2021ஆம் ஆண்டு ஜனவரி 11ஆம் திகதியன்று நான்கு வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து, உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.
நீதித்துறையின் நற்பெயரை அவமதிக்கும் வகையிலும், நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் வகையிலும் உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கு தொடர்பாக ஊடகங்களுக்கு ரஞ்சன் ராமநாயக்க கருத்து வெளியிட்டதன் பின்னர் உயர்நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை பகிரங்கமாக முன்நிறுத்தியதன் மூலம் ரஞ்சன் ராமநாயக்க, உயர் நீதிமன்றத்தை அவமதித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

## அரசாங்கத்தின் பதில் கொரோனா

ஹம்பாந்தோட்டை, முல்கிரிகல தேர்தல் தொகுதி ஐக்கிய மக்கள் சக்தியின் மித்தெனிய தலைமை அலுவலகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், “மூன்று வேளையும் சாப்பிட்டு நலமாக வாழ்ந்த மக்கள் இன்று மிகவும் ஆதரவற்ற நிலையில் உள்ளனர். உரத்தை தடை செய்த அரசாங்கம் பயிர்ச் செய்கை மேற்கொண்ட மக்களின் வருமானத்தை அழித்துள்ளது.

“தொழிற்சாலைகள் மூடப்படும் நிலை தொடரும் அதேவேளை, இன்று எமது நாட்டுக்கு வரும் அந்நிய நேரடி முதலீடும் குறைந்துள்ளது. “கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சிக்கு வந்தவுடனேயே தொழிலதிபர்களுக்கும் கோடீஸ்வரர்களுக்கும் வரிச்சலுகை வழங்கிய அரசாங்கமே இன்று ஏற்பட்ட இந்த பாரிய வீழ்ச்சிக்குப் பொறுப்பு. ஏறக்குறைய அனைத்து சர்வதேச நிதி மதிப்பீடுகளிலிருந்தும் நாடு அதிக ஆபத்தில் உள்ளது” என்றார்.

# ‘காட்டாட்சியை வீழ்த்த வேண்டும்’

எண்ணெய் இல்லை. எரிவாயு இல்லை. பால்மா இல்லை. உரம் இல்லை. மருந்துகள் இல்லை. எதுவும் இல்லை. சொல்லப்போனால் இந்நாட்டில் இன்று அரசாங்கமே இல்லை.

“உரம் இல்லை என்று கையை விரித்து விவசாயிகளிடம் மன்றாடும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, “உங்கள் நிலங்களில் நெல் விளைவிக்க முடியாவிட்டால், பாசிப்பயறு விளைவியுங்கள்” என்று கூறுகிறார். இது, “பாண் இல்லாவிட்டால், கேக் சாப்பிடுங்கள்” என்று சொன்ன பிரான்ஸ் நாட்டு கொடுங்கோல் அரசியை ஞாபகப்படுத்துகின்றது” என்றார்.

வெள்ளைபூண்டு ஊழலை கண்டு பிடித்து, அம்பலப்படுத்திய முன்னாள் நுகர்வோர் அதிகார சபை பணிப்பாளர் துசான் குணவர்தன, வெளிநாடு செல்ல முடியாமல் தடுக்கப்பட்டுள்ளார். இது என்ன கோலம்? குற்றவாளிகள் சுதந்திரமாக சுற்றி திரிவது ஒருபுறம் இருக்க, குற்றவாளிகளை கண்டு பிடிக்கும் நடவடிக்கையை எடுத்த நேர்மையான அதிகாரிகள் தண்டிக்கப்படுகிறார்கள்.

> **நான் மனோ கணேசன். தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவன். எங்கள் கூட்டணி, எவருக்கும் எடுபிடி வேலை செய்யாத, ஒரு பலமான, தைரியமுள்ள சுதந்திரமான கட்சி. இது மக்களின் கட்சி. எம்மை எவரும் பயமுறுத்த முடியாது. நாங்கள் பயந்து ஒதுங்க மாட்டோம். அதை இன்னமும் பலமாக நாம் வளர்ப்போம். அது ஒன்றே எமது பலம்**

இன்று இங்கே “ஊழல் எதிர்ப்பு குழு என்று ஏன் முன்னாள் அரசாங்க பிரமுகர்கள் மீது நடவடிக்கை எடுத்தீர்கள்” என என்னை கேட்டு தொந்தரவு செய்கிறார்கள். ஊழல் செய்தவர்கள் மீதான வழக்குகளை சட்டமா அதிபர் திணைக்களம் மூலம் வாபஸ் வாங்கி விட்ட நிலையில், ஊழல் செய்தவர்கள் எல்லாம் சுதந்திரமாக திரியும் போது, ஏன் நீங்கள் நடவடிக்கை எடுத்தீர்கள் என இவர்கள் என்னை கேட்கிறார்கள்.

நான் மனோ கணேசன். தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவன். எங்கள் கூட்டணி, எவருக்கும் எடுபிடி வேலை செய்யாத, ஒரு பலமான, தைரியமுள்ள சுதந்திரமான கட்சி. இது மக்களின் கட்சி. எம்மை எவரும் பயமுறுத்த முடியாது. நாங்கள் பயந்து ஒதுங்க மாட்டோம். அதை இன்னமும் பலமாக நாம் வளர்ப்போம். அது ஒன்றே எமது பலம்.

## தொலைபேசி அழைப்பை ஆராய கோரிக்கை

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

நகர்த்தல் பத்திரம் மூலம் இப்படுகொலை தொடர்பிலான வழக்கு, நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி. றிஸ்வான் முன்னிலையில் நேற்று (24) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சட்டத்தரணி என். கமலதாஸ் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

“சம்பவம் நடைபெற்ற வேளை இராஜாங்க அமைச்சர் தன்னுடைய வீட்டிலிருந்தார் என்றும் அதன் பின்னரே அவர் அங்கிருந்து வெளியேறிச் சென்றார் என்ற தகவலும் இருக்கும் காரணத்தால் இந்த இரு விடயங்கள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்க வேண்டும் என்று நீதவானிடம் கோரியிருக்கின்றோம்.

“இராஜாங்க அமைச்சர் எப்போது வீட்டைவிட்டு வெளியேறினார் என்பதை அறிவதற்காக வீதிகளில் உள்ள சிசிடிவி காட்சிகள் விசாரணை செய்யப்பட வேண்டும்.

“இந்த வழக்குத் தொடர்பில் சம்பந்தப்பட்ட பொலிஸார் விசாரணைகளை முறையாக முன்னெடுக்காத காரணத்தால் குறித்த வழக்கானது கரடியனாறு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக நீதவான் தெரிவித்தார் என” ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மேலும், சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு முதன் முதலில் தொடர்பை ஏற்படுத்திய இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், அந்த அழைப்பை எடுத்த இடம் மற்றும் வழியில் இருந்த சிசிடிவி காணொளிகளை உடன் பரிசீலனை செய்யவேண்டும் என்ற கோரிக்கை சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த வழக்கு, பெப்ரவரி மாதம் 03ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## ஐ.நா செல்ல ஆராய்வதாக கர்தினால் அறிவிப்பு

எனவே, சர்வதேசத்துக்கு செல்வதற்கான (அதுவும் ஐ.நா.வுக்குச் செல்வதைக் குறிக்கும்) சாத்தியக்கூறுகளை ஆராய்வதாகத் தெரிவித்தார்.

இந்த வழக்கை முன்னெடுத்துச் செல்வதற்காக இலங்கையுடன் தொடர்பு வைத்திருக்கும் சக்தி வாய்ந்த நாடுகளையும் அணுகவுள்ளதாகக் குறிப்பிட்டார்.
கத்தோலிக்க திருச்சபையானது உலகம் முழுவதும் தொடர்புகளைக் கொண்ட ஒரு சர்வதேச அமைப்பாகும் என்று குறிப்பிட்ட அவர், கர்தினால் என்ற முறையில் தனது சக கர்தினால்களுடன் இந்த வழக்கை எடுத்துச் செல்லவுள்ளதாகவும் கூறினார்.
உள்நாட்டில் நீதி கிடைக்கும் என நம்புவதால் மேற்கூறிய நடவடிக்கைககளை தாம் எடுக்கவில்லை என்றும் எனினும் அது அவ்வாறு நடப்பதாகத் தெரியவில்லை என்றும் குறிப்பிட்டார்.

## 53 மில். டொலர்களை விடுவிக்க அரசாங்கம் தீர்மானம்

மின்சாரம் வழங்குவதற்கு தேவையான டீசல் மற்றும் உலை எண்ணெயைப் பெறுவதற்கு இந்தியாவிடம் இருந்து இலங்கை மின்சார சபை கடன் வசதியைப் பெறும் என தெரிவித்த எரிசக்தி அமைச்சர், நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இது தொடர்பில் தற்போது கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

## இ.மி.சவுக்கு ரூ.9,300 கோடி வழங்குமாறு ஜனாதிபதி பணிப்பு

மின்வெட்டை அமுல்படுத்த வேண்டாம் என ஜனாதிபதி தமக்கு பணிப்புரை விடுத்ததாக மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே நேற்று (24) இடம்பெற்ற சந்திப்பின் போது தெரிவித்தார்.
எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இன்று (நேற்று) இடம்பெற்ற முக்கிய கூட்டத்தில் இந்த தீர்மானம் எட்டப்பட்டதாக அவர் கூறினார்.
கொழும்பு துறைமுகத்தில் இரண்டு எண்ணெய் தாங்கிகளில் எரிபொருளை மாற்றுவதற்கு தேவையான அமெரிக்க டொலர்களை விடுவிக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொருளாதாரம் மேலும் சீரழியும்

புதிய மாறுபாட்டின் ஆபத்துகள் மற்றும் பரவலைக் கட்டுப்படுத்த நடைமுறையில் உள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து நாட்டு மக்களுக்கு தெரிவிக்குமாறு அரசாங்கத்திடம் அவர் கேட்டுக்கொண்டார்.
தொற்றுநோயைக் கட்டுப்படுத்த சுகாதாரத் துறை மிகவும் கடினமாக உழைத்துள்ளது என்று குறிப்பிட்ட அவர், எனினும் ஒமிக்ரான் மாறுபாட்டுடன் ஐரோப்பா எவ்வாறு போராடுகிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். அங்கு 50 சதவீதத்துக்கும் அதிகமான மக்கள் ஒமிக்ரான் மாறுபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார்.
ஒமிக்ரான் தொற்றால் இறப்பு வீதம் ஒப்பீட்டளவில் குறைவாக உள்ள போதும் ஒரு நபர் நோய்வாய்ப்பட்டால், அவர் சிறிது காலம் வேலை செய்ய முடியாது, இது பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கூறினார்.
தொற்றைக் கட்டுப்படுத்த அனைவரும் தடுப்பூசியின் பூஸ்டர் டோஸைப் பெறுவதை உறுதி செய்ய வேண்டிய அவசியம் உள்ளது என்று சுட்டிக்காட்டினார்.
மக்கள் தங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பதை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். மக்கள் விழிப்புடன் இருந்தால் மட்டுமே அவர்கள் தங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்றார்.

## நிபந்தனை விதிக்கவேண்டும்

இந்திய அரசு நிபந்தனை விதிக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல்களுக்கு எதிரான ஆதாரங்களைத் திரட்டும் ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் முயற்சிகளுக்கு ஒத்துழைக்குமாறு இலங்கை அரசாங்கத்தை மத்திய அரசாங்கம் வலியுறுத்த வேண்டும் எனவும் டொக்டர் எஸ்.ராமதாஸ் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## குப்பி விளக்குடன் வந்தார் அத்தநாயக்க

அங்கு அவர் தெரிவித்திருந்தாவது, தற்போதைய நிர்வாகம் நாட்டை மீண்டும் இருண்ட யுகத்துக்கு தள்ளுவது புலனாகிறது என்றும் இரண்டு ஆண்டு கால ஆட்சி தோல்வியடைந்துள்ளது என்றும் அவர் கூறினார்.
பயணத்தை குறைக்கவும், பாடசாலைகள் மற்றும் பயிற்சி வகுப்புகளை மூடவும், வேலைக்கு செல்வதை குறைக்கவும், நாளாந்தம் கொழும்புக்கு வரும் வாகனங்களின் எண்ணிக்கையை குறைக்கவும் அமைச்சர் கம்மன்பில பரிந்துரைத்த முன்மொழிவுகளையும் சுட்டிக்காட்டினார்.
பொதுமக்களின் அன்றாட நடவடிக்கைகளை குறைக்க அரசாங்கம் முன்வந்தால், குறிப்பாக பொருளாதார நெருக்கடியின் போது அது சிக்கலான விடயம் என்றார்.
தற்போதைய மின்சார நெருக்கடியை தீர்ப்பதற்கு அரசாங்கத்திடம் கூட்டு அணுகுமுறை இல்லை எனவும் உண்மையில் தடையில்லா மின்சாரம் வழங்கும் திட்டம் அரசாங்கத்திடம் உள்ளதா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.
இந்த விடயத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் தலையீடு செய்வதை தான் காணவில்லை என தெரிவித்த அவர், அரசாங்கம், மக்களை குற்றம் சாட்டுவதில் மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்தார்.

## தாக்குதலில் டிப்பர் சாரதி படுகாயம்

இதனால் கண் மற்றும் முதுகுப் பகுதிகளில் காயமடைந்த நிலையில் டிப்பர் சாரதி, புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைவேலி பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய நவரத்தினம் உதயசீலன் என்ற குடும்பஸ்தரே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, புதுக்குடியிருப்பு கைவேலிப் பகுதியில் டிப்பரை மறித்த சிவில் உடை தரித்த இராணுவ புலனாய்வாளர்கள், டிப்பரில் என்ன இருக்கின்றது என்று கேட்டதாகவும் டிப்பரில் எதுவும் இல்லாத நிலையில் தன்னை இறக்கி இரும்புக் கம்பியால் தாக்கியுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட சாரதி தெரிவித்துள்ளார்.

இராணுவப் புலனாய்வாளர்கள் இருவர் மதுபோதையில் இருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட சாரதியின் நண்பர்களை, இராணுவ முகாமிற்கு அழைத்து சமரசம் பேசப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

## நின்று பயணித்தால் புதிய கட்டண முறை

இந்த விதிமீறல்கள் தொடர்பில் கடந்த வாரம் பொலிஸ் மா அதிபருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக தெரிவித்த இராஜாங்க அமைச்சர் அமுனுகம, தடையை மீறும் பஸ் நடத்துனர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

எனினும், கைது செய்யப்பட்டாலும், கிராமப்புறங்களில் அத்துமீறல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்றார்.

இந்த நடவடிக்கை நிறுத்தப்படாவிட்டால் இந்த வாரத்தில், ஆசனங்களில் அமராத பயணிகளுக்கான பஸ் கட்டணத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படும் என இராஜாங்க அமைச்சர் எச்சரித்துள்ளார்.

தொற்றுநோய் காரணமாக பஸ் கட்டணத்தை அதிகரிக்குமாறு பஸ் உரிமையாளர்களின் கோரிக்கைகளை தாங்கள் நிறைவேற்றியதாகவும், எனவே, அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாடுகளை அவர்கள் கடைப்பிடிப்பது நியாயமானது என்றும் அமுனுகம சுட்டிக்காட்டினார்.

மேலும், கட்டுப்பாடுகள் தொடர்ந்து மீறப்படும் பட்சத்தில், அமராத பயணிகளுக்கும், அமர்ந்து பயணிக்கும் பயணிகளுக்கு என தனி பஸ் பயணக் கட்டணத்தை அதிகாரிகள் அறிமுகப்படுத்துவார்கள் என்றும் அவர் கூறினார்.

தற்போதைய நிலைமையை மதிப்பீடு செய்து இந்த வாரத்துக்குள் இந்த புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என இராஜாங்க அமைச்சர் அமுனுகம மேலும் தெரிவித்தார்.

## விற்கும் தீர்மானத்தை பரிசீலனை செய்யவும்

அவர்கள் மீன்பிடிக்கும் நோக்கத்தில் மட்டுமே கடற்பரப்புக்குள் வருக்கின்றனர்.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் அவர்கள் எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை. எனவே மனிதாபிமான அடிப்படையில் இந்த விடயத்தை கடற்தொழில் அமைச்சு மறுப்பறிசீலனை செய்ய வேண்டும்.

இந்த படகுகளை மீண்டும் அவர்களிடம் ஒப்படைக்கும் சந்தர்ப்பத்தில் இரு நாட்டின் மீனவ சமூகத்தினருக்கும் இடையில் நட்புறவு வலுப்படும். மீனவர்களின் பிரச்சினைக்கு இரு நாடுகளும் பேச்சுவார்த்தையின் ஊடாகவே சுமூகமான தீர்வினை எட்ட முடியும். மீனவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டதால், மீனவர்கள் படகின்றி தொழிலுக்கு செல்ல முடியாமல் பாரிய பொருளாதார சிக்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை ஏலத்தில் விடும் பொழுது மீனவ சமூகத்தினர் மேலும் வாழ்வாதார நெருக்கடிக்குள் தள்ளப்படக்கூடிய சூழல் ஏற்படுகிறது. பொருளாதார ரீதியாக முன்னேறி வரும் மீனவ சமூகத்திற்கு இந்நடவடிக்கை ஒரு முட்டுக்கட்டையாக அமையும் என்று தெரிவித்துள்ளார்.

> **இந்த படகுகளை மீண்டும் அவர்களிடம் ஒப்படைக்கும் சந்தர்ப்பத்தில் இரு நாட்டின் மீனவ சமூகத்தினருக்கும் இடையில் நட்புறவு வலுப்படும். மீனவர்களின் பிரச்சினைக்கு இரு நாடுகளும் பேச்சுவார்த்தையின் ஊடாகவே சுமூகமான தீர்வினை எட்ட முடியும்.**

# முன்பாகவே வெளியானதாக கூறப்படுவது தவறானது

கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வினாப்பத்திரங்கள், பரீட்சை தினத்திற்கு முன்பாகவே வெளியானதாக கூறப்படும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாணவர்களிடம் வினாத்தாள்கள் கையளிக்கப்பட்டதன் பின்னர், சில வினாத்தாள்கள் நிழற்படம் எடுக்கப்பட்டு சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன கூறியுள்ளார்.

இதனால் பரீட்சைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை (22) நடைபெற்ற 2021, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 340,508 மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

இதனிடையே, பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணிகள் எதிர்வரும் 31 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

பாடசாலைக்குச் சென்ற

## மாணவர்களை மோதிவிட்டு தப்பியோடிய மினி பஸ்

■ எம்.றொசாந்த்

நீர்வேலி, பூதவராயர் மடம் பகுதியில் நேற்று (24) காலை 07 மணியளவில் பாடசாலைக்குச் சென்ற மாணவர்கள் மீது மோதி, விபத்துக்கு உள்ளாகிய தனியார் பஸ், அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளது.

இந்த விபத்தில் இரு மாணவர்கள் உள்ளிட்ட மூவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது: குடும்ப பெண் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளில் தனது பிள்ளை உள்ளிட்ட இருவரை பாடசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளார். அவ்வேளை, பருத்தித்துறை வீதி வழியாக யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் (மினி) அவர்கள் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டு, அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

இதில் காயமடைந்த மாணவர்கள் இருவரும், அவர்களை பாடசாலைக்கு அழைத்து சென்ற குடும்ப பெண்ணும் காயங்களுக்கு உள்ளான நிலையில், அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு, கோப்பாய் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் நீர்வேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

GMOAயின் மற்றுமொரு வழிகாட்டி

## ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது



நாளாந்தம் அடையாளம் காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிவித்துள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் வாசன் ரட்ணசிங்கம், கடந்த மாதம் நாளொன்றுக்கு 350, 400ஆக அடையாளம் காணப்பட்ட தொற்றார்களின் எண்ணிக்கை, தற்போது 600 ஐ தாண்டியுள்ளது என்றார்.

உலக நாடுகளில் 110 நாடுகளுக்கு மேல் ஒமிக்ரோன் பிறழ்வு பரவியுள்ளதாகத் தெரிவித்த அவர், இலங்கையிலும் ஒமிக்ரோன் தொற்றாளர்கள் அதிகமாக அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். எனவே தற்போதைய ஒமிக்ரோன் பிறழ்வு முகாமைத்துவம், அதனை எவ்வாறு சமாளித்தல் என்பது தொடர்பில் 12 வைத்திய நிபுணர்கள் அடங்கிய குழுவால் தயாரிக்கப்பட்ட வழிகாட்டியொன்று ஜனாதிபதி, சுகாதார அமைச்சர் உள்ளிட்டவர்களுக்கு கையளிக்கப்படவுள்ளது என்றார்.

சமுதாய விசேட வைத்தியர்கள், பொது வைத்திய நிபுணர்கள், தொற்று நோய், ஆய்வுகூட வைத்தியர்கள் உள்ளிட்ட 12 வைத்திய நிபுணர்கள் இந்த வழிகாட்டியை தயாரித்துள்ளதுடன், இதன்மூலம் எவ்வாறு 5ஆவது அலையை சமாளிக்கப் போகிறோம் என விஞ்ஞானபூர்வமாக வழிகாட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்றார்.

மேலும், கொரோனாவால் ஏற்படும் விளைவுகள், மரணங்களைக் கட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசியின் அவசியத்தை கடந்த காலங்களில் அறிவித்துள்ளதாகத் தெரிவித்த அவர், இலங்கையில் முதலாவது தடுப்பூசியை 74 சதவீதமானோரும் இரண்டாவது தடுப்பூசியை 64 சதவீதமானவர்களும் செலுத்தியுள்ள நிலையில், பூஸ்டர் தடுப்பூசியை 24 சதவீதமானவர்களே செலுத்தியுள்ளனர் என்றார்.

குறைந்த பட்சம் 75 சதவீதத்துக்கு அதிகமானவர்கள் பூஸ்டரைப் பெற்றுக்கொண்டால் தான், இலங்கை நோய் எதிர்ப்பு சக்தி உள்ள நாடாகப் பாதுகாக்கலாம் என்பதை அந்த வழிகாட்டியில் சுட்டிக்காட்டியுள்ளோம் என்றார்.



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர்

## சர்வதேச ஒலிபரப்பை கண்காணித்தார்

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் 'கொழும்பு சர்வதேச ஒலிபரப்பு' அண்மையில் ஆரம்பமான நிலையில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று (24) இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் கலையகத்திற்கு வருகை தந்து, கொழும்பு சர்வதேச ஒலிபரப்பை நேரடியாக கண்காணித்தார்.

அத்தோடு கொழும்பு சர்வதேச ஒலிபரப்பு இடம்பெறும் கலையகத்துக்கும் சென்று அவர் நிகழ்ச்சிகளை செவிமடுத்தார்.

**“ இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் 'கொழும்பு சர்வதேச ஒலிபரப்பு' ஆரம்பமான நிலையில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, கலையகத்திற்கு வருகை தந்து, கொழும்பு சர்வதேச ஒலிபரப்பை நேரடியாக கண்காணித்தார்**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு வருகை தந்த இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவை, கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க, தலைவரின் பிரத்தியேக செயலாளர் வீரசிங்கம் ஜெய்சங்கரும் வரவேற்றனர்.

மாணவர்களுக்கு அநீதி நியாயம் கோரி

## பரீட்சைகள் திணைக்கள ஆணையாளருக்கு கடிதம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ



இந்த மாதம் 22ஆம் திகதி நாடளாவிய ரீதியில் நடைபெற்ற 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, ஹட்டன் புனித கெப்ரியல் பாடசாலை மாணவிகளின் பெற்றோரால், பரீட்சைகள் திணைக்கள ஆணையாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அத்துடன், அந்தக் கடிதத்தின் நகல் ஒன்று ஹட்டன் கல்வி வலய பணிப்பாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையின் 7191 ஆம் இலக்க பரீட்சை அறையில், தமிழ் மற்றும் சிங்கள மாணவர்களுக்கு பரீட்சை நடைபெற்றது. இதன்போது தமிழ் மாணவர்களுக்கு சிங்கள வினாத்தாளும் சிங்கள மாணவர்களுக்கு தமிழ் வினாத்தாளும் வழங்கப்பட்டுள்ளன. எனினும் மாணவர்கள் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தெரிவித்ததை அடுத்து, சரியான முறையில் வினாத்தாள் பகிரப்பட்டுள்ளது.

எனினும் இந்த விடயத்துக்காக மாணவர்கள் சில நிமிடங்களை செலவிட நேர்ந்துள்ளது. ஆனால் பரீட்சை மேற்பார்வையாளரால் மாணவர்களுக்கு அதற்காக நேரம் ஒதுக்காமல், உரிய நேரத்தில் விடைத்தாள்களைப் பொறுப்பேற்றதால் மாணவர்கள் தமது விடைப்பத்திரங்களை பூரணப்படுத்தாமல் கையளித்துள்ளனர்.

எனவே இந்த விடயம் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும் என தெரிவித்தே, மாணவர்களின் பெற்றோரால் பரீட்சைகள் திணைக்கள ஆணையாளருக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




## நீல மாணிக்கம்

சீன பெய்ஜிங்கில் உள்ள தூதரகத்தால் கடந்த 17ஆம் திகதியன்று நடத்தப்பட்ட கவர்ச்சியான நிகழ்வில் இலங்கையின் இரத்தினக் கற்கள் காட்சிப்படுத்தப்பட்டன. 'லார்வினர் - ஜெம் ஆர்ட் ஜூவல்லரி' இன் அனுசரணையுடன், பிரமிக்க வைக்கும் இலங்கையின் நீல மாணிக்கம் மற்றும் ஏனைய வண்ணக் கற்கள் காட்சிப்படுத்தப்பட்டன. பல உயர்தர வர்த்தகர்கள் உட்பட அழைக்கப்பட்ட சுமார் 100 விருந்தினர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இரு நாடுகளுக்கும் இடையில், இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்ட 65வது ஆண்டு விழா, ரப்பர் அரிசி ஒப்பந்தத்தின் 70 ஆவது ஆண்டு விழாவையொட்டி பல்வேறு நிகழ்வுகளை தூதரகம் ஏற்பாடு செய்து வருகின்றது.

23ஆவது கொடகே

## தேசிய சாகித்திய விருது-2022

23ஆவது கொடகே தேசிய சாகித்திய விருது-2022 விழாவும், கொடகே தேசிய 2020ஆம் ஆண்டுக்கான தமிழ் ஆக்க இலக்கியப் பிரதிப் போட்டிக்கான பரிசளிப்பு விழாவும் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி, புதன்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு கொழும்பு-7 கொழும்பு பொது நூலகத்தில் சுகாதார விதிகள் படி நடைபெறும்.

**“ கொடகே தேசிய சாகித்திய விருது–2022 விழாவும், கொடகே தேசிய 2020ஆம் ஆண்டுக்கான தமிழ் ஆக்க இலக்கியப் பிரதிப் போட்டிக்கான பரிசளிப்பு விழாவும் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி, புதன்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு கொழும்பு–7 கொழும்பு பொது நூலகத்தில் சுகாதார விதிகள் படி நடைபெறும்**

இந்த நிகழ்வில் 23ஆவது கொடகே தேசிய சாகித்திய விருது-2021க்கான விருதுகளாக மல்லிகை சி.குமாரின் 'வேடத்தனம்' எனும் சிறுகதைத் தொகுப்புக்கும் வெலிமடை ரபீக்கின் 'ஒரு நானும் இன்னும் ஒரு நானும்' எனும் கவிதைத் தொகுப்புக்கும் மொழிபெயர்ப்பு நூலுக்கான விருது சிங்களத்திலிருந்து எம்.ரிஷான் ஷரீப் தமிழில் மொழிபெயர்த்த கத்யானா அமரசிங்ஹ வின் 'தரணி' எனும் நாவலுக்கும் முதல் நூல் நூலுக்கான விருதினையும் ஆ.லெ.மு. இர்ஷாத்தின் 'ஒளி பூக்கும் இரவு' எனும் ஹைக்கூ தொகுதிக்கும் வழங்கப்படும்.

2020ஆம் ஆண்டுக்கான கொடகே தேசிய தமிழ் ஆக்க இலக்கியப் பிரதிகளுக்கான போட்டியில் சிறந்த சிறுதைத் தொகுப்பாக தெரிவு செய்யப்பட்ட பாலரஞ்சனி ஜெயபாலின் 'நெத்திக்காசு' எனும் தொகுப்புக்கும், சிறந்த கவிதைத் தொகுதியாக தெரிவு செய்யப்பட்ட ஜன்ஸி கபூரின் 'பிறப்பிட நிழலிலே' எனும் தொகுப்புக்கும் விருதுகள் வழங்கப்படும். அத்துடன் ஆங்கில, சிங்கள நூல்களுக்கும் விருதுகள் வழங்கப்படும்.

கடலலை உட்புகுவதால்

## காபட் வீதி சேதமடையும் அபாயம்

■ ஜூட் சமந்த

தொடர்ச்சியாக இரண்டு நாள்களாக ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் ஏற்பட்ட கடலரிப்பு காரணமாக,சிலாபம்-தொடுவாவ வீதி பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் குறித்த பகுதி அதிகமாக கடலரிப்புக்கு உள்ளானதால், கரையோர பாதுகாப்பு திணைக்களத்தால் அப்பகுதியில் கல்வேலி அமைக்கப்பட்டது.

எனினும், கல்வேலி உரிய முறையில் அமைக்கப்படாமையால் கடலலை வீதிக்கு வருவதுடன், இதனால் இரண்டு வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் காபட் இடப்பட்டு அண்மையில் நவீனமயப்படுத்தப்பட்ட சிலாபம்- தொடுவாவ வீதி சேதமடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

# “அனுமதியை இரத்துச் செய்க”

## கற்பிட்டியில் ஆர்ப்பாட்டம்

■ ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - கற்பிட்டி ஆழ்கடல் பகுதியில் மீன்பிடிப்பதற்காக இழுவைப் படகுகளுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதியை உடனடியாக இரத்துச் செய்யுமாறு கோரி, கற்பிட்டி - ஆணைவாசல் இறங்குதுறை பகுதியில் நேற்றுமுன்தினம் (23) மாலை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

கற்பிட்டி பகுதியிலுள்ள ஐந்து மீனவச் சங்கங்களின் உறுப்பினர்கள் இணைந்து இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது, “எமது கடல் வளங்களை பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்”, “ இழுவை படகுகளுக்கு வழங்கப்பட்ட அனுமதியை இன்றே இரத்துச் செய்”, “இலஞ்சம் வாங்கிவிட்டு இழுவைப் படகுத் தொழிலுக்கு அனுமதி வழங்காதே”, “ சிறு கடல் தொழிலாளர்களும் வாழ வேண்டும்” என இதுபோன்ற பல கோஷங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பினர்.

அத்தோடு, நாட்டில் டொலர் இல்லை என கூறுகிறார்கள். எனினும், கற்பிட்டி கடலில் டொலர் இருக்கிறது என ஆர்ப்பாட்டக்காரர்கள் குறிப்பிட்டனர்.



கடந்த காலங்களில் கற்பிட்டி கடலில் அதிகமான இறால்கள், நண்டுகள் பிடிக்கப்பட்டு அவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால், இன்று நமது நாட்டில் விற்பனை செய்வதற்கு கூட இறால்கள் இல்லை.

தடைசெய்யப்பட்ட இழுவை வலைகளை பயன்படுத்தி மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டமையே இதற்கு காரணமாகும் எனவும் குற்றம் சுமத்தினர்.

ஊடகவியலாளர் சுகிர்தராஜனின்

# நினைவு தினத்தில் நீதி கோரல்

வா.கிருஸ்ணா, க.விஜயரெத்தினம், எம்.எஸ்.எம்.நூர்தீன், வ.சக்தி, நூருல் ஹுதா உமர்

திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சு.சுகிர்தராஜனின் 16ஆவது ஆண்டு நினைவு தினம், மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்று (24) அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு.ஊடக அமையம் ஆகியன இணைந்து நடத்திய இந்த நிகழ்வு, மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய செயலாளர் எஸ்.நிலாந்தன் தலைமையில் நடைபெற்றது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சு.சுகிர்தராஜனின் படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு, ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டதை தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அதேவேளை, ஊடகவியலாளர் படுகொலைக்கு நீதி கோரி, மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு முன்னாலுள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் ஞாபகார்த்த நினைவுத் தூபிக்கு முன்னால், கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றது.

இதன்போது ஊடகவியலாளரின் படுகொலைக்கு நீதி வேண்டும் எனவும், தற்போது ஊடகவியலாளர் கோகிலன் உட்பட கைதுசெய்யப்பட்ட பேஸ்புக் செயற்பாட்டாளர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு, தெற்கு ஊடக அமைப்புகளின் ஒத்துழைப்புடன் இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

இதில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பி.அரியநேந்திரன், ஞா.சிறீநேசன், ஊடகவியலாளர்கள், கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

2006 இல் உயர்தரக் கல்வியை முடித்து, பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருந்த 5 மாணவர்கள், திருகோணமலை கடற்கரையில் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

படுகொலை செய்யப்பட்ட மாணவர்களை, ஊடகவியலாளர் சுகிர்தராஜன் நிழற்படமெடுத்து செய்தி வெளியிட்டிருந்தார். மாணவர்களின் இறப்புக்கு, கைக்குண்டுத் தாக்குதலே காரணம் என்று விசாரணையை திசைதிருப்ப முயற்சித்தபோது, இவர் எடுத்த நிழற்படங்கள் தலையில் சுடப்பட்டு இறந்தமையைத் தெளிவாக எடுத்துக் காட்டின. இதனால் சர்வதேச ரீதியில் அரசுக்கு அவப்பெயரும் அழுத்தங்களும் ஏற்பட்டன. அத்துடன், கொலை செய்யப்படுவதற்கு முதல் நாள், அரசு சார்பு கட்சியொன்றின் நடவடிக்கைகள் அடங்கிய தகவல்களை, பத்திரிகையில் ஊடகவியலாளர் சுகிர்தராஜன் வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.








# இலவச பாடநூல்கள் விநியோகம்

எச்.எம்.எம்.பர்ஸான்

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச பாடநூல்கள், நாடு பூராவும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு, இலவச பாடநூல்கள் விநியோகம் செய்யும் நிகழ்வு, நேற்று (24) நடைபெற்றது.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.ரீ.அஜ்மீரின் வழிகாட்டலில், கோட்டக் கல்வி உத்தியோகத்தர்களால் இந்நூல்கள் வழங்கி வைக்கப்பட்டன.



மத்திய வங்கியின் நிதிசார்

# விழிப்பூட்டும் செயலமர்வு

எம்.எஸ்.எம்.நூர்தீன்

இலங்கை மத்திய வங்கியின் நிதிசார் நிபுணத்துவம் தொடர்பாக, பிரதேச செயலக ரீதியாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கை, இலங்கை மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக, காத்தான்குடி பிரதேச செயலகத்தில் இலங்கை மத்திய வங்கியின் நிதிசார் நிபுணத்துவம் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் செயலமர்வு, பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று (24) நடைபெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் யு. உதய சிறீதர் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில், இலங்கை மத்திய வங்கியின் கிழக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் கே.பிரபாகரன், திருகோணமலை முகாமையாளர் எம். நிரோசன் ஆகியோர் கலந்துகொண்டு, இலங்கை மத்திய வங்கியின் நிதிசார் நிபுணத்துவம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக விளக்கமளித்தனர்.



# வாழ்வாதாரத்தை மேம்படுத்தல்

ஹஸ்பர்

வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டத்தை மேம்படுத்தும் நோக்கிலான பயிற்சிநெறி, சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் தம்பலகாமம் பிரதேச சமுர்த்தி கிளையின் ஏற்பாட்டில், பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று (24) நடைபெற்றது.

இச்செயலமர்வில் கால்நடை வளர்ப்பாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல், பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுத்தல் உட்பட பல பயிற்சிகள் வழங்கப்பட்டன.

அத்துடன், 35 பயனாளிகளுக்கு 64 இலட்சம் ரூபாய் பெறுமதியான காசோலைகளும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில், தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி, உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம். சித்திக், பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



ஒரு வகையான

# வைரஸ் காய்ச்சல் பரவும் அபாயம்

எம்.எஸ்.எம். ஹனீபா



அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட தொடர் மழையை அடுத்து, கல்முனைப் பிராந்தியத்தில் ஒரு வகையான வைரஸ் காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸ், நேற்று (24) தெரிவித்தார்.

இது தொடர்பில் பொதுமக்கள் அலட்சியம் செய்யாமல், அவதானமாக இருக்குமாறும், கொதித்தாறிய நீரைப் பருகுமாறும் கேட்டுள்ளார்.

இருமல், வயிற்றுவலி, தலைவலி, உடல் சோர்வு போன்றனவையே அந்தக் காய்ச்சலின் அறிகுறிகள் எனவும், இவ்வாறான அறிகுறிகள் காணப்படுமாயின் உடனடியாக வைத்திய ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுமாறும் வலியுறுத்தியுள்ளார்.

இக் காய்ச்சல் அறிகுறிகள் தொடர்ந்து காணப்படுமாயின் வீட்டை விட்டு வெளியேற வேண்டாமெனவும் அறிவித்துள்ளார்.

கல்முனைப் பிராந்தியத்தில் கடந்த சில நாள்களாக கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்து வருவதால், பொதுமக்கள் இறுக்கமான சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறும், அறிவித்துள்ளார்.

மேலும், டெங்கு காய்ச்சல் பரவி வருவதாகவும் அது தொடர்பிலும் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறும் கேட்டுள்ளார்.

புலிகளால் புதைக்கப்பட்ட தங்கத்தைத் தேடிய

# வேட்டை முறியடிப்பு

## ஏழு பேர் கொண்ட குழு கைது; பொலிஸ் கான்ஸ்டபிளும் சிக்கினார்

மு.தமிழ்ச்செல்வன், சுப்பிரமணியம் பாஸ்கரன்



கிளிநொச்சி மாவட்டம், இராமநாதபுரம் பகுதியில் புதையல் அகழ்வதற்காக இரண்டு வாகனங்களில் சென்ற ஏழு பேர் கொண்ட குழுவினர், வட்டக்கச்சி பொலிஸ் சோதனைச் சாவடியில் நேற்று முன்தினம் (23) இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து புதையல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்படும் ஸ்கானர் இயந்திரம் மற்றும் ஏனைய சில பொருட்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கைதானவர்களில் ஒருவர் பொலிஸ் கான்ஸ்டபிள் என்றும் தெரியவந்துள்ளது. இராமநாதபுரம், சம்புக்குளம் பகுதியில் புதையல் அகழ்வதற்காக தென்னிலங்கையிலிருந்து இவர்கள் வந்துள்ளதாக முதற்கட்ட



விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த பகுதியில் இதற்கு முன்னரும் புதையல் தோண்டும் முயற்சியில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தங்கம் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற தகவலின் அடிப்படையில், அவற்றை அகழ்வதற்கான முயற்சிகள் பல தடவைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

உயர் கற்கைநெறிகளுக்கு

# விண்ணப்பம் கோரல்

க. அகரன்

2020ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், வவுனியா உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் இலவச முழுநேர உயர்கல்வியைத் தொடர்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அந்தவகையில், உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா மற்றும் உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா கற்கைநெறிகளுக்கு, எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்கலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்கின்ற மாணவர்களில் HNDA பூர்த்தி செய்பவர்கள், பல்கலைக்கழக பட்டத்துக்கு பிரதியீட்டுத் தகைமையை பெறுவதுடன், அரச துறையில் பட்டதாரிகள் நியமனத்தின் போதும் தனியார் துறைகளில் இடைநிலைக் கணக்காளர்களாகவும் வரமுடியும்.

மேலும், HNDE கற்கை நெறியைப் பூர்த்தி செய்பவர்கள் தற்பொழுது ஆசிரியர் சேவையில் தகைமையாகக் கருதப்படுவதுடன், தனியார் துறையின் எதிர்பார்க்கைகளுக்கு இணங்க தகைமையுடையவர்களாக வெளியேறுகின்றனர்.

மேலதிக விவரங்களுக்கு **0242052733, 0776162010, 0772313189, 0770257314** ஆகிய இலக்கங்களுடன் தொடர்புகொண்டு, தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.



நெற் செய்கை

# யானையால் துவம்சம்



க.அகரன்

வவுனியா, ஆசிகுளம் கிராம சேவகர் பிரிவில் விவசாய செய்கையில் ஈடுபட்டிருந்த காணிக்குள் புகுந்த யானை அங்கிருந்த நெற் செய்கையை மிதித்து துவம்சம் செய்துள்ளது.

ஆசிகுளம் வயல் பகுதியில் தொடர்ச்சியாக யானையின் பாதிப்புக் காணப்படுவதாக தெரிவிக்கப்படும் நிலையில், நேற்று முன்தினம் இரவும் யானை, ஒரு ஏக்கருக்கும் அதிகமான வயல் நிலத்தை சேதப்படுத்தியுள்ளது.

பசளை இன்மையால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தற்போது யானையின் பாதிப்புகளுக்கும் முகங்கொடுக்கும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வவுனியாவில்

# பிள்ளையார் சிலை மாயம்

க. அகரன்



வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் பிள்ளையார் சிலையொன்று காணாமல் போயுள்ளது.

வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் உள்ள இலுப்பை மரத்தின் கீழ் சிறிய கூடாரம் அமைக்கப்பட்டு, பிள்ளையார் சிலை வைத்து நீண்ட காலமாக வழிபடப்பட்டு வந்தது.

இலுப்பையடிப் பகுதி வர்த்தகர்கள், ஓட்டோ சாரதிகள், அப்பகுதியால் பயணத்தில் ஈடுபடும் மக்கள் எனப் பலராலும் வழிபடப்பட்டு வந்த பிள்ளையார் சிலையே இவ்வாறு காணாமல் போயுள்ளது.

இனந்தெரியாத நபர்கள், குறித்த சிலையை அங்கிருந்து அகற்றியுள்ளதுடன், சிலை இருந்த இடம் தற்போது வெறுமையாகக் காட்சியளிக்கின்றது.

வடமாகாண

# தொண்டர் ஆசிரியர்கள் கவனயீர்ப்பு



டி.விஜித்தா

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்னால், வட மாகாண தொண்டர் ஆசிரியர்கள் நேற்று (24) கவனயீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கவனயீர்ப்பில் ஈடுபட்ட தொண்டர் ஆசிரியர்கள் இது தொடர்பில் தெரிவிக்கையில், "யுத்தத்தால் பாதிக்கப்பட்ட, கணவனை இழந்த மற்றும் விசேட தேவையுடையவர்களைக் கொண்ட குடும்பங்களில் இருந்து தான், நாங்கள் பல வருடங்களாக தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி வருகின்றோம்.

"கடந்த 21.01.2022 அன்று அமைச்சால் கல்வி வலயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் 60 தொண்டர் ஆசிரியர்கள் வடக்கு மாகாணத்தில் உள்ளார்கள் என்றும் அவர்களது நியமனம் தொடர்பாக ஆராயுமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.

"ஆனால், வடக்கு மாகாணத்தில் 210 தொண்டர் ஆசிரியர்கள் உள்ளோம். 60 தொண்டர் ஆசிரியர்கள் எனக் கடிதத்தில் வந்துள்ளது. இது தொடர்பாக வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கத்தை வினவிய போது, அவர்கள் தமக்கு எதுவும் தெரியாது என்று கூறுகின்றனர்.

"நாங்கள் இது தொடர்பாக அமைச்சினை வினவியபோது, வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கம் அனுப்பிய பெயர் விவரங்களின் அடிப்படையிலேயே குறித்த கடிதத்தை தாங்கள் அனுப்பியதாகத் தெரிவிக்கின்றனர்.

"எனவே, மிகுதி 110 பேரின் பெயர்களும் அந்தக் கடிதத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். அத்தோடு, உரிய அதிகாரிகள் எமது நிலையை கருத்தில்கொண்டு, எமக்கான நியமனத்துக்கு ஏற்பாடுகளை செய்ய வேண்டும் எனக் கோரியே, நாங்கள் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்" என்றனர்.

தனக்கு வாக்களிக்காதவர்களை

# ஜனாதிபதி எப்படி கருதுகிறார்?

## பேராசிரியர் விஜேசந்திரன் கேள்வி

டி.ஷங்கீதன்

தனக்கு வாக்களிக்காத சிறுபான்மை மற்றும் பெரும்பான்மை மக்களை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இரண்டாம் தர பிரஜைகளாகக் கருதுகின்றாரா என பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை பேராசிரியரும் மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகமுமான சங்கரன் விஜேசந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரை தொடர்பில் கருத்து தெரிவித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், ஜனாதிபதியாகப் பதிவியேற்ற பொழுது, தனக்கு வாக்களித்த வாக்களிக்காத அனைவருக்கும் ஜனாதிபதி எனக் கூறிவிட்டு, இன்று அதற்கு முரண்பாடாக அனைத்து இடங்களிலும், ஜனாதிபதி உரையாற்றி வருகின்றமையானது, சிறுபான்மை மக்கள் மத்தியில் மனத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

சிறுபான்மை மக்கள் அவருக்கு வாக்களிக்கவில்லை என்ற ஒரு விடயத்தை மனதில் வைத்துக் கொண்டு, இனப்பிரச்சினை விடயத்திலும் மாகாண சபை தேர்தலை நடத்துவதிலும், இழுத்தடிப்பு செய்யப்படுகின்றதா என்ற கேள்வியும் எழுகின்றது.

சிறுபான்மை மக்களாகிய நாங்கள் அனைவரும், அவரை அனைவருக்குமான ஜனாதிபதியாகவே பார்க்கின்றோம். இந்த நாட்டில் இருக்கின்ற அனைவரையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். 30 வருடங்களுக்கு மேலாக இருக்கின்ற இனப்பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும். அதேநேரம், மலையக மக்கள் விடயத்திலும் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

இது ஜனாதிபதியிடம் நாங்கள் முன்வைக்கின்ற சமூகம் சார்ந்த வேண்டுகோள் என்பதைப் புரிந்து கொண்டு, அவர் செயற்படுவார் என்ற நம்பிக்கையே தவிர, வெறுமனே ஜனாதிபதியைக் குறை கூறுகின்ற ஒரு செயற்பாடாக இதைக் கருதக்கூடாது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என்றார்.



சத்திரசிகிச்சைக்காக சேகரிக்கப்பட்ட

# கலைஞரின் நிதியில் மோசடி

மஹேஸ் கீர்த்திரத்ன



கலைஞர் ஒருவரின் சத்திரசிகிச்சைக்காக சேகரிக்கப்பட்ட நிதியை வங்கியிலிருந்து சூட்சுமமான முறையில் கொள்ளையிட்ட நபரைக் கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு குறித்த வங்கி வைப்பிலிருந்து 1,50,000 ரூபாய் கொள்ளையிடப்பட்டு உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

கலைஞரான மாத்தளையைச் சேர்ந்த நந்திக அலுவிஹாரவின் முதுகெழும்பில் சத்திரசிகிச்சை செய்வதற்காக பல்வேறு வழிகளில் நிதி சேகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நபர் ஒருவர் நிதியுதவி வழங்குவதாகத் தெரிவித்து, இந்த மோசடி செயற்பாட்டை முன்னெடுத்துள்ளமை தெரியவந்துள்ளது.

எனவே, இந்த விடயம் தொடர்பில் மாத்தளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக பாதிக்கப்பட்ட கலைஞர் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருட்களுடன் கைதுசெய்யப்பட்ட

# 25 பேருக்கும் பிணை

செ.தி.பெருமாள், ரஞ்சித் ராஜபக்ஷ

போதைப்பொருட்களுடன் சிவனொளிபாத மலைக்கு யாத்திரை சென்ற 27 இளைஞர்கள் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களிடம் இருந்து கஞ்சா, போதை வில்லைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

நல்லத்தண்ணி, ஹட்டன் பொலிஸார் இணைந்து இவ்விளைஞர்களைக் கைது செய்திருந்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 18- 30 வயதுக்கு இடைப்பட்ட குருநாகல், காலி, அநுராதபுரம், கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் 25 பேரை ஹட்டன் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது, அவர்களுக்குப் பிணை வழங்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.





# தைப்பொங்கல் விழா

பாத்ததும்பறை பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட தைப்பொங்கல் விழா, வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாத்ததும்பறை பிரதேச செயலாளர் டபிள்யூ. எம்.டி.டி.கே வீரகோன், சைவ அபிமானி சங்க தலைவர் சிவராஜா, பொது செயலாளர் யோகா மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# மண்ணுக்குள் புதையுண்டு ஒருவர் மரணம்

சேஹ்ன் செனவிரத்ன

கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தென்னக்கும்பர, தெக்வத்த பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதானவர் மண்மேடு சரிந்து விழுந்ததால் உயிரிழந்துள்ளார்.

தனது வீட்டுக்குச் செல்லும் பாதையை நேற்றுமுன்தினம் (23) துப்புரவு செய்துகொண்டிருந்த போது, மேலே இருந்த மண்மேடு சரிந்து விழுந்துள்ளது.

இதனையடுத்து பிரதேசவாசிகள் நபரை மீட்கும் போதே, அவர் உயிரிழந்திருந்ததாகவும் சம்பவம் தொடர்பில் கண்டி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.





# ஆட்லி குடியிருப்பில் தீ

## பிரதேசவாசிகளால் பரவாமல் கட்டுப்படுத்தப்பட்டது

எஸ்.கணேசன்

டயகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வேவர்லி தோட்டம், ஆட்லி பிரிவிலுள்ள லயன் குடியிருப்பு, நேற்று (24) காலை தீ பரவலுக்கு உள்ளானது.

காலை 7.30 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ பரவலால், 14 வீடுகளைக் கொண்ட தொடர் லயன் குடியிருப்பில் ஒரு வீடு முற்றாக எரிந்துள்ளது. அந்த வீட்டிலிருந்த 5 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தீ ஏற்பட்ட போது, வீட்டில் இருந்தவர்கள் கூச்சலிட்டதை அடுத்து, அயலவர்கள் ஓடி வந்து ஏனைய வீடுகளுக்கு தீ பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

முற்றாக எரிந்த வீட்டில் பெருமளவிலான வீட்டு உபகரணங்கள் உள்ளிட்டப் பொருட்கள் தீக்கிரையாகியுள்ளன.

இதேவேளை, இது தொடர்பாக டயகம பொலிஸ் நிலையத்திற்கும் தோட்ட நிர்வாகத்திற்கும் பிரதேசவாசிகளால் தகவல் கொடுக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், தீ பரவலுக்கான காரணங்களை கண்டறிய மேலதிக விசாரணகளை மேற்கொண்டு வருவதோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கு தோட்ட நிர்வாகம் தேவையான உதவிகளை செய்து வருகின்றது.

ஹட்டன் நகர சபை உறுப்பினர்களின்

# வருகையை வலியுறுத்த வேண்டும்

## எஸ். கேசவமூர்த்தி வேண்டுகோள்

துவாரகஷான்

ஹட்டன்- டிக்கோயா நகர சபையின் மாதாந்த அமர்வுகளில் சில உறுப்பினர்கள் கலந்து கொள்வதில்லை என சபையின் உறுப்பினர் எஸ். கேசவமூர்த்தி தெரிவித்துள்ளார்.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வருகை தந்து வரப்பிரசாதங்களைப் பெற்றுக் கொள்வது வழமையாக இருந்து வருகின்றது. இந்த விடயத்தில், மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பை உணர்த்த, நகர சபைத் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளார்.

நகர மக்களின் பிரச்சினைகளைப் பற்றி பேசவும், அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவும் மக்கள் வாக்களித்து உறுப்பினர்களைத் தெரிவு செய்துள்ளார்கள். ஆனால், ஹட்டன் நகர சபையில் சில உறுப்பினர்கள் முறையாக வருகை தருவதில்லை, பிரச்சினைகளைப் பற்றி வாய் திறப்பதுமில்லை என்றார்.

அரசாங்கம் உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலத்தை மேலும் ஒரு வருட காலத்துக்கு நீடித்துள்ளமை, மக்களுக்குச் சேவைச் செய்ய வேண்டும் என்ற ரீதியில் அல்லாமல், வெறுமனே கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக அல்ல என்பதை, அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றார்.

இந்தியாவின் 75ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு

# மலையகத்திலும் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு

டி.ஷங்கீதன்

இந்தியாவின் 75ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு, கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்துள்ள நிகழ்வுகள் கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய இடங்களில் நடைபெற்றன.

இதனை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த திரைப்பட திருவிழா ஏற்பாடுகள், நுவரெலியா மாநகர பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன் தினம் (13) மாலை 3 மணிக்கு நடைபெற்றது.



இதன்போது நுவரெலியாவில் அமைந்துள்ள சிறுவர் இல்லங்களை சேர்ந்த சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், பெரியோர்கள் கலந்து கொண்டனர். இதில் தமிழ்த் திரைப்படம் காட்சிப்படுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன், நுவரெலியா மாநகர பிரதி மேயர் யதர்சனா புத்திரசிகாமணி, கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயத்தின் இரண்டாம் நிலை செயலாளர் சி.ஆர். கிருஸ்ணபிரசாத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிறுமி துஷ்பிரயோகம்

# காதலனும் தாயும் கைது

சுமணசிறி குணதிலக

பொரலந்த பிரதேசத்தில் 15 வயது சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தில் 18 வயது இளைஞனும் அவனது தாயும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பிரத்தியேக வகுப்புக்குச் செல்வதாக வீட்டாரிடம் தெரிவித்துவிட்டு, கடந்த 22ஆம் திகதி பகல்வேளையில் வீட்டிலிருந்து கிளம்பிய அச்சிறுமி, மீண்டும் வீடு திரும்பவில்லை. இதனையடுத்து, அச்சிறுமியை பெற்றோர் தேடியுள்ளனர்.

எனினும், சிறுமியின் காதலான 18 வயது இளைஞருடன் சிறுமி சென்றுள்ளமை உறுதியாகியுள்ளது. அதன்பின்னர் தேடி பார்த்தபோது, சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அதற்கு இளைஞனின் தாயும் உடந்தையாக இருந்துள்ளார். இவ்விருவரும் கைது செய்யப்பட்டு வெல்லவாய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட சிறுமி, வெல்லவாய ஆரம்ப வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இளைஞனின் சத்திர சிகிச்சைக்காக

# அரவிந்தகுமார் நிதியுதவி

எம். செல்வராஜா



இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்த நிலையில், சிகிச்சை பெற்று வரும் 23 வயதான இளைஞர் ஒருவரின், வைத்திய செலவுகளுக்காக, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமாரால் இரண்டு இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

அரவிந்த குமார் எம்.பி மேற்கொண்ட முயற்சியின் பயனாக, அவுஸ்திரேலியா நாட்டில் இருக்கும் அவரது புதல்வனான பிரவீன் அரவிந்தகுமார் இந்நிதியை வழங்கியிருந்தார்.

நிதி முகாமைத்துவத்தை கருத்திற் கொண்டு, அந்நிதியிலிருந்து முதல் கட்டமாக ஒரு இலட்சம் ரூபாயை பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் கே.சர்மிளாதேவி, சிகிச்சை பெற்று வரும் இளைஞரின் தாயாரிடம் நேரில் சென்று வழங்கினார்.

மிகுதி பணத்தை, சம்பந்தப்பட்டவர்கள் மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பும் போது வழங்கப்படவுள்ளது.

# அறிகுறிகள் தென்பட்டால் வீட்டை விட்டு வெளியேற வேண்டாம்

கொரோனா வைரஸ் பிறழ்வு, ஒமிக்ரோனா மாறி, உலகையே உலுக்கிக்கொண்டிருக்கும் நிலையில், இலங்கையிலும் அதன்தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. அடுத்ததாக, 'ஒமிக்ரோன் அலை' உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதாரத் தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த ஒரு வாரத்துக்குள் மட்டும், 5,000க்கும் அதிகமான கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இக்காலப்பகுதியில் கொரோனா மரணங்கள் 87 பதிவாகியுள்ளன. இந்த நிலைமை நீடிக்குமாயின், 'ஒமிக்ரோன் அலை' உருவாகும் என்பதில் ஐயமில்லை.

நேற்று முன்தினம் (23) மட்டும், கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்கள் 838 பேர் இனங்காணப்பட்டனர். அதிலொருவர் வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பியவர் என்பதுடன், இலங்கையில் இனங்காணப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 601,886 ஆக அதிகரித்துள்ளமையும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

இதற்கிடையே, நாட்டின் பல பாகங்களிலும் ஒருவகையான வைரஸ் காய்ச்சல் பரவிவருவதை அவதானிக்க முடிகின்றது. எவ்விதமான வயது வித்தியாசமும் இன்றி, இந்த வைரஸ் பரவிக்கொண்டிருக்கின்றது. ஆகையால், கொதித்தாறிய நீரைப் பருகுமாறு சுகாதாரத் தரப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் சீரற்ற வானிலையை அடுத்தே, இவ்வாறு இனம்புரியாத வைரஸ் காய்ச்சல் பரவிக்கொண்டிருக்கிறது என, சுகாதார தரப்பினர் தெரிவித்துள்ளனர். ஆகையால், அலட்சியம் செய்யாமல், அவதானமாக இருக்குமாறும் அறிவுறுத்தியுள்ளனர்.

இருமல், வயிற்றுவலி, தலைவலி, உடற்சோர்வு போன்றவையே அந்தக் காய்ச்சலின் அறிகுறிகள் எனவும், இவ்வாறான அறிகுறிகள் காணப்படுமாயின் உடனடியாக வைத்திய ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுமாறும் வலியுறுத்தியுள்ளனர். இவ்வாறான அறிகுறிகள் தொடர்ந்தும் காணப்படுமாயின், வீட்டை விட்டு வெளியேற வேண்டாமெனவும் அறிவித்துள்ளனர்.

கொரோனாவுடன் டெங்கு காய்ச்சல் சிற்சில இடங்களில் தலைத்தூக்கியது. இதற்கிடையே, புதுவகையான வைரஸ் காய்ச்சலும் தலைதூக்கிவிட்டது. அதில் சிக்கிக்கொள்ளாமல் இருக்கவேண்டுமாயின் சுகாதார வழிகாட்டல்களை அச்சொட்டாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்து கொள்ளும் வகையிலான உணவுகளை உட்கொள்வதென்பது சாதாரண மக்களுக்கு, தற்போதைய சூழ்நிலையில் இயலாத காரியமாகும். ஆகையால். வீட்டுத்தோட்டத்தில் கிடைக்கின்ற கீரை வகைகளை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதனூடாக ஓரளவுக்கேனும், நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்துக் கொள்ளமுடியும்.

புதிய வைரஸ் காய்ச்சலுக்கான அறிகுறிகள் தென்பட்டால், வீட்டுக்குள்ளும் மிகக் கவனமாக இருக்க வேண்டும். இல்லையேல், முழுக்குடும்பத்துக்கும் தொற்று ஏற்பட்டு, அதுவே சங்கிலித் தொடராகிவிடும்.

சாதாரண மனிதனிடத்தில் இவ்வாறு வைரஸ் காய்ச்சல்கள் தொற்றுவதற்கு பிரதான காரணமாக அமைவது, நோயெதிர்ப்பு சக்தியின் சதவீதமாகும். ஆகையால், நோயெதிர்ப்பு சக்தியை பெற்றுக்கொள்வதற்கு ஆகக்கூடுதலான கரிசனை காட்ட வேண்டும். சுகாதாரத் தரப்பினரின் அறிவுறுத்தலுக்கமைய கொதித்தாறிய நீரைப் பருகவேண்டும். இவற்றின் ஊடாகவே, புதிய தொற்றுக்குள் சிக்கிக்கொள்வதிலிருந்து தவிர்க்கலாம்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

நிம்மதியான வாழ்க்கைக்கு மூன்று விடயங்களைச் சரிவரச் செய்ய வேண்டும். கடின உழைப்பு, உழைப்புக்கு ஏற்ற செலவு, சேமிப்பு என்பனவாகும்.

நிகழ்காலம் சிறப்பாக அமைந்திட, கல்வி கற்கையிலேயே தமக்கான தொழில்களைச் செய்வதுடன், உண்மை, நேர்மை தவறாது நடத்தல் வேண்டும். கல்வி கற்காதவர்கள் திறமை இல்லாதவர்கள் இல்லை. அவர்கள் தமக்கு ஏற்ற கருமங்களை, உறுதியுடன் செய்யும் திறனுள்ளவர்கள். வரவுக்கேற்ற செலவு, கட்டுக்கோப்பான வாழ்க்கையை சமானியர்களும் சிறப்புடன் ஆற்றிவருகின்றார்கள்.

உழைப்பில் பேதம் இல்லை. யாவரின் உழைப்பும் ஒருவருக்கு மட்டுமானது கிடையாது. எல்லோரது பணிகளும், ஏதோவொரு வழியில் வையகத்தையே சென்றடைகின்றன.

ஒரு விவசாயியின் உழைப்பு, அவருக்கு மட்டுமானதல்ல! அவை பகிரப்படுகின்றன. இதுதான் உலக நீதி. உழைக்கும் மனிதன் போராடியபடியே உலகைக் காத்துவருகின்றான். நாங்கள் இவர்களைப் போற்ற வேண்டும்.

ஒருவரின் திறன், ஆற்றல் என்பன அவரின் செய்கருமங்கள் ஊடாகத் தெரியப்படுத்தப்படுகின்றன. மகிழ்ச்சியுடன் செய்யும் செயலின் நற்பேறுகள், பல்மடங்காக அதிகரித்து, பொங்கிப் பிரவாகிக்கும்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# இஸ்லாம் பாடநூல்களை மீளப்பெறும் விவகாரம்

மொஹமட் பாதுஷா

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இஸ்லாம் பாடப் புத்தகங்கள் சிலவற்றை, மீளப்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளமையும் இதற்கு வெளித்தரப்பின் அழுத்தமே காரணம் எனக் கூறப்படுகின்றமையும், இன்று முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் கரிசனைக்குரிய விவகாரமாக நோக்கப்படுகின்றது.

வழங்கப்பட்டுள்ள அல்லது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும் சிங்கள மொழிமூலத்திலான தரம் 6, 7, 10 மாணவர்களுக்கான இஸ்லாம் பாடநூல்கள், தமிழ் மொழிமூலமான தரம் 6, 10, 11 தர மாணவர்களுக்கான இஸ்லாம் பாடநூல்கள் ஆகியவற்றை மீளப் பெறுமாறே கல்வி வெளியீட்டுத் திணைக்களம், பாடசாலைகளுக்கு உத்தியோகபூர்மாக அறிவித்துள்ளதாக அறிய முடிகின்றது.

முதலாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு, பாடநூல்கள் பெருமளவுக்கு விநியோகிக்கப்பட்ட பிற்பாடு, ஏதோ ஒரு தவறைக் கண்டுபிடித்து அல்லது, ஒரு காரணத்தின் அடிப்படையில் பாடநூல்களை மீளப் பெறுமாறு அறிவுறுத்தப்பட்டு இருக்கின்றமை கவனிப்புக்கு உரியது.

குறிப்பிட்ட பாடப் புத்தகங்களில், ஒருசில இஸ்லாமிய விடயங்கள் தொடர்பான விடயதானங்களில் திருத்தங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையிலேயே, இவற்றை மீளப்பெறும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

பாடசாலை பாடப் புத்தகங்களைத் திருத்தியமைப்பதும் மறுசீரமைப்பதும் காலத்துக்குக் காலம் சில உள்ளடக்கங்களை நீக்கிவிட்டு, புதுப்புது விடயங்களை உட்சேர்ப்பதும் வழக்கமானது மட்டுமன்றி, அவசியமானதும் ஆகும்.

ஆனால், சமய விடயங்கள் பெரும்பாலும் வரலாற்றுடன் தொடர்புபட்டவை என்பதாலும் இஸ்லாம் உட்பட அனைத்து சமயங்களின் நடைமுறைகளும் தொன்மையானவையுடன் எல்லாக் காலத்திலும் நிலைமாறாத் தன்மை கொண்டவை என்பதாலும், இதில் பெரியளவான மாற்றங்கள் மேற்கொள்ள முடியாது.

பன்மைத்துவ சமூகங்கள் வாழும் நாடு என்ற வகையிலும், சமய விடயங்களை மிகச் சரியாகப் பிள்ளைகளுக்கு கற்றுத்தர வேண்டும் என்ற அடிப்படையிலும், காலத்துக்கு ஏற்ப சிறுசிறு சரிபார்ப்புகள் மேற்கொள்ளப்படுவது நல்ல விடயமே.

ஆனால், பொதுவாக பாடப் புத்தகங்களில் தவறு இருந்தால் அவை திருத்தப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்படும். இந்த வருடத்தில் தவறுகள் அடையாளம் காணப்பட்டால், அது பெரும்பாலும் அடுத்த வருட நூல்களிலேயே திருத்தப்பட்டிருக்கும். ஏனெனில், அப்பணியை ஒரு குறிப்பிட்ட சில நாள்களுக்குள் செய்து முடிக்க இயலாது.

நிலைமை இப்படியிருக்க, பாடசாலை ஆரம்பித்து, இரு வாரங்களில் கொடுக்கப்பட்ட நூல்களை மீளப் பெறுமாறு அறிவிக்கப்பட்டமையே, முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் ஒரு சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, ஞானசார தேரர் தலைமையிலான 'ஒரேநாடு, ஒரே சட்டம்' தொடர்பான ஜனாதிபதி செயலணியின் சிபாரிசுக்கு அமைவாகவே, இந்தப் பாடநூல்களை மீளப் பெற நடவடிக்கை எடுக்கப்படுவதாக சமூக வலைத்தளங்களில் கருத்துகள் பரிமாற்றப்படுகின்றன.

ஆயினும், "இவ்விடயம் தொடர்பில் 'ஒரேநாடு, ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியில் கலந்துரையாடப்பட்டது என்றாலும், இவ்வாறு மீளப் பெறுவதற்கான அறிவுறுத்தல்களையோ சிபாரிசையோ செயலணி வழங்கவில்லை" என்று, செயலணியின் உறுப்பினர் மறுத்துரைத்துள்ளார். இதுவெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும்!

இவ்வருடம் பாடப் புத்தகங்கள் விநியோகிக்கப்பட்ட பிறகே, இதிலுள்ள திருத்தப்பட வேண்டிய விடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன என்று அனுமானிக்க முடிகின்றது. அப்படியென்றால், தமிழ், சிங்கள மொழி மூலங்களிலான மேற்படி ஆறு புத்தகங்களிலும், இவ்வளவு காலமும் இந்தத் தவறு காணப்பட்டுள்ளது என்பதே அர்த்தமாகும்.

பாடப் புத்தகங்களை, இலங்கை முஸ்லிம்கள் சார்ந்த எந்த அமைப்பும் நேரடியாக அச்சிடுவதில்லை. கல்வி அமைச்சிலும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திலும் அதற்கென்று ஒரு கட்டமைப்பு இருக்கின்றது; பரிந்துரைக்கப்பட்ட துறைசார் வளவாளர்கள் உள்ளனர்.

இவர்கள் எல்லோராலும் சரிபார்க்கப்பட்டு, அச்சிடப்பட்டு, விநியோகிக்கப்பட்ட புத்தகங்களில் உள்ள விடயங்களில், தவறுகள் இருக்கின்றன என்ற விடயம், நீண்ட காலத்துக்குப் பின்னரே கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதாகவே கருத வேண்டியுள்ளது.

அவ்வாறாயின், மேற்படி பாடப் புத்தகங்களைக் கடந்த கல்வியாண்டுகளில் கற்ற மாணவர்கள், தவறான விடயங்களைக் கற்றுக் கொண்டிருக்கின்றார்களா என்ற வினா எழுகின்றது? அப்படியாயின், அதற்குக் காரணமான முஸ்லிம் துறைசார்ந்தவர்களும் கல்வி அமைச்சின் அதிகாரிகளும் இதற்குக் கூறும் பதில்தான் என்ன என்ற கேள்வியும் உள்ளது.

பாடப் புத்தகங்கள் என்பவை, மாணவர்கள் வெறுமனே படித்துவிட்டு, பரீட்சைக்கு விடையளிப்பதோடு சம்பந்தப்பட்ட விடயமல்ல. முழுக் கல்வியுமே மாணவர்களின் வாழ்க்கையோடு கலந்து விடுகின்றது. அதுதான் கல்வியின் உண்மையான நோக்கமாகவும் இருக்க வேண்டும்.

அந்தவகையில், இலங்கையில் பௌத்த மதத்தை அடிப்படையாகக் கொண்ட வரலாறு, மாணவர்களுக்கு புகட்டப்பட்ட அளவுக்கு, தமிழ், முஸ்லிம் மக்கள் இந்த நாட்டுக்குச் செய்த தியாகங்கள், பாடவிதானங்களில் பெருமளவுக்கு உள்ளடக்கப்படவில்லை. பல வரலாறுகள் திரிபுபடுத்தப்பட்டுள்ளன என்பது, நீண்டகாலமாக முன்வைக்கப்படுகின்ற விமர்சனமாகும்.

எவ்வாறிருப்பினும், தவறுகள் அடையாளம் காணப்படும்போது, அதைத் திருத்துவதுதான் சிறந்தது. அந்தவகையில், உண்மையிலேயே பிழையைத் திருத்துவதற்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களம் இந்த நடவடிக்கையை எடுத்திருக்குமாயின், அது பாராட்டப்பட வேண்டும்.

ஆனால், இவ்வளவு காலமும் தவறுடன் இந்நூல் பிரசுரமாகியிருந்ததை, கல்வி வெளியீட்டுத் திணைக்களமோ கல்வி அமைச்சில் இருந்த அதிகாரிகளோ இஸ்லாம் பாட ஆசிரியர்களோ கண்டறியவில்லையா? அப்படியென்றால், யார் இதற்குப் பொறுப்பாளிகள்?

'இது அவ்வளவு பெரிய தவறு இல்லை' என்றால், இந்த நூல்களை அதிரடியாக மீளப் பெற்றிருக்கத் தேவையில்லை. நூல்களில் திருத்தங்களை மேற்கொண்டு, மீள்பதிப்பை அச்சிட்டு விட்டு, அடுத்த ஆண்டுக்கு விநியோகித்திருக்க முடியும்.

அவ்வாறில்லாமல். இப்போது திடுதிடுப்பென தவறுகள் அடையாளம் காணப்படுவதும், அவசரமாக மீளப் பெறப்படுவதுமே இதற்குப் பின்னால் வேறு மறைமுக அழுத்தம் இருக்கக் கூடும் என்ற சந்தேகத்தை முஸ்லிம்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

இப்பாடப் புத்தகங்களில் உள்ளடங்கியுள்ள விடயங்கள், தற்போது தவறு என அடையாளம் காணப்படுகின்றது என்றால், இவ்வளவு காலமும் அதைச் சரி எனக் கூறியவர்கள் யார்? அதற்கு மேலொப்பம் இட்ட அதிகாரிகள் யார்?

அவர்கள் முதற்கொண்டு, எந்தக் கேள்வியும் இல்லாமல் கற்பித்த இஸ்லாம்பாட ஆசிரியர்கள் வரை, எல்லோருமே இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். சமயம் பற்றிய விடயம், இளைய தலைமுறையினருக்கு மிகச் சரியாகக் கடத்தப்படாமல் விட்டதற்கு, அவர்கள் காரணமாகி இருக்கின்றார்கள்.

அதற்காக, தவறுகளைத் தவறுகளாக விட்டு வைக்க முடியாது. பெரிய அதிகாரிகள் தொகுத்த பாடவிதானம் என்பதற்காக, இஸ்லாத்தை பிழையாக மாணவர்கள் கற்பதற்கு வழிவிட முடியாது. தவறுகள் யார் செய்தார்கள் என்பது ஒருபுறமிருக்க, அவை திருத்தப்படுவது அவசியமாகும்.

அந்த வரிசையில், கல்வி வெளியீட்டுத் திணைக்களம் அதைத் திருத்த எடுத்த முயற்சியையும் பாராட்ட வேண்டும். சமகாலத்தில், இந்த விடயதானங்கள் தவறு என்றால், அதற்குக் காரணமான சகலருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்பதும் கட்டாயமானது.

மறுபுறத்தில், இந்த உத்தேச பிழைதிருத்தம், மறுசீரமைப்பு என்பன எந்தவித உள்நோக்கங்களும் இல்லாதவை ய என்பதை யார் உறுதிப்படுத்துவது? திருத்திய பதிப்பில் எல்லாம் நூறுசதவீதம் சரியாக இருக்கும் என்பதற்கு யார் உத்தரவாதம் தருவது?

எனவே, இதுபற்றி கல்வி அமைச்சும் கல்வி வெளியீட்டுத் திணைக்களமும் தெளிவான விளக்கங்களை அளிக்க வேண்டும். இந்தத் தவறான பாடநூல்களைக் கற்ற மாணவர்கள், அவர்களது பெற்றோர், சமூக ஆர்வலர்கள் என சமூகத்தின் எல்லா மட்டத்தினரும் விளங்கிக் கொள்ளும் விதத்தில் இவ்விளக்கம் இருக்க வேண்டும்.

அதுபோல, கல்வி வெளியீட்டுத் திணைக்களத்துக்கு இஸ்லாம் தொடர்பான பாடவிதானங்களைத் தொகுத்தளிக்கின்ற வளவாளர்கள், திணைக்களம், அமைச்சிலுள்ள முஸ்லிம் அதிகாரிகள் முதற்கொண்டு அதிபர், ஆசிரியர்கள் வரை, இதுபற்றிய ஆரோக்கியமான கருத்துகளை முன்வைக்க வேண்டும்.

தமது சம்பள அதிகரிப்புக்காக போராடிய கல்விச் சமூகம், மாணவர்களுக்கு சரியான, தவறற்ற அறிவு கிடைப்பதை உறுதிப்படுத்தவும் முன்வர வேண்டும். 'எங்களுக்கென்ன, கல்வி வெளியீட்டுத் திணைக்களம் அனுப்புகின்ற புத்தகங்களில் உள்ள விடயதானங்களை, எந்தச் சுய ஆய்வும் இன்றி மாணவர்களுக்கு புகட்டிவிட்டுப் போவோம்' என்று நினைப்பவர்கள், நல்ல ஆசிரியர்களாக இருக்க முடியாது.

## கடிதங்கள்

### மூலிகை பண்ணைக்கு யானை வேலியின் அவசியம்


கிளிநொச்சி மாவட்டத்தின் கல்மடு பகுதியில் அமைந்துள்ள ஆயுர்வேத வைத்திய மூலிகைப் பண்ணைக்கு, யானை வேலி அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கல்மடுப் பகுதியில் அமைந்துள்ள ஆயுர்வேத மூலிகைப் பண்ணையில், பல்வேறு ஆயுர்வேத மருத்துவ குணம் கொண்ட பயிர்கள் செய்கை பண்ணப்பட்டு வரும் நிலையில், குறித்த பண்ணையில் யானைகளின் அட்டகாசம் அதிகளவில் காணப்படுகிறது. குறிப்பாக, பெருமளவான அரிய மூலிகைகளை, யானைகள் அழித்து வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, ஆயுர்வேத மூலிகைப் பண்ணை வளாகத்தைச் சுற்றி, வேலி அமைத்து தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 13ஆம் திகதி, கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதும் குறித்த கோரிக்கை முன் வைக்கப் பட்டிருந்த நிலையில், கிளிநொச்சி மாவட்டத்தின் கல்மடு தொடக்கம், திருமுருகண்டி வரைக்குமான 23 கிலோ மீற்றர் வரையான பகுதிக்கு, யானை வேலி அமைப்பதற்கான திட்டங்கள் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் இதனை அமைப்பதற்கு குறித்த பிரதேசங்களில் 600க்கும் மேற்பட்ட மரங்களை அகற்ற வேண்டி இருப்பதனாலும் இது தொடர்பில் ஆராய வேண்டி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

-யது பாஸ்கரன்



# மீண்டும் ஐட்டம் டான்ஸ்?

அல்லு அர்ஜுன் நடித்த 'புஷ்பா' திரைப்படத்தில் சமந்தா ஆடிய 'ஊ சொல்றியா மாமா, ஊஊ சொல்றியா மாமா' என்ற ஐட்டம் டான்ஸ் பாடல், மிகப் பெரிய அளவில் வரவேற்பை பெற்றது.

இதனையடுத்து, சமந்தாவை அடுத்து ரெஜினா, தமன்னா உட்பட மேலும் சில முன்னணி நடிகைகள் ஒருசில திரைப்படங்களில் ஐட்டம் டான்ஸ் ஆடி வருகின்றனர்.

இந்த நிலையில் தெலுங்கு திரையுலகின் இன்னொரு மாஸ் நடிகரான விஜய் தேவரகொண்டா நடித்து வரும் 'லிகர்' என்ற திரைப்படத்திலும் சமந்தா ஒரு பாடலுக்கு ஐட்டம் டான்ஸ் ஆட வாய்ப்பு இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இது குறித்து பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும் விரைவில் அறிவிப்பு வெளியாகும் என்றும் கூறப்படுகின்றது.





சென்னை

# ஸ்டாலின் பெயர் வைத்தது எப்படி?

## முதல்-அமைச்சர் சொன்ன சுவாரஸ்ய கதை



"உங்களுக்கு ஒரு வேண்டுகோள். உங்களுக்கு பிறக்கின்ற குழந்தைக்கு அழகான தமிழ் பெயரை சூட்டுங்கள். உங்களுக்கு ஒரு சந்தேகம் வரலாம். உங்களுக்கு மட்டும் என்ன தமிழ் பெயரா..? என்று கேட்பீர்கள். அதற்கான விளக்கம் நான் பல இடங்களில் கூறியிருக்கிறேன் என்று தமிழக முதலமைச்சர் மு.கா ஸ்டாலின் தெரிவித்தார்.

தமிழ் திரைப்பட நடிகர் சங்கத்தின் நிர்வாகிகளில் ஒருவரான பூச்சி முருகன் இல்லத் திருமணம் நேற்று (24) நடைபெற்றது. இந்தத் திருமணத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு மணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

கலைஞரை பொறுத்தவரையில் அண்ணணாக இருந்தாலும், எனது தங்கையாக இருந்தாலும் அனைவருக்கும் தமிழ்ப் பெயர்தான். எனக்கு மட்டும்தான் கொஞ்சம் வித்தியாசம். அதற்கும் ஒரு காரணம் இருக்கிறது.

அது ஒரு காரணப்பெயர். கம்யூனிச கொள்கை மீது கலைஞருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. அதனால்தான் அவர் இறந்த நேரத்தில், நான் பிறந்த காரணத்தால் அவருடைய நினைவாக அந்தப் பெயரை எனக்கு சூட்டினார்கள். அந்தப் பெயரை சூட்டுவதற்கு முன்பு கலைஞர் எனக்கு என்ன பெயர் வைக்கவேண்டும் என்று நினைத்திருந்தார் என்று சொன்னால், எனக்கு 'அய்யாதுரை' எனப் பெயர் வைப்பதாக இருந்தது. அய்யா என்றால் தந்தை பெரியார். துரை என்றால் அண்ணாவின் பெயருக்கு பின்னால் வரக்கூடிய துரை என்று வைக்க வேண்டும் என்று கருதி இருந்தார்கள்.

ரஷ்யாவில் இருந்த 'ஜோசப் ஸ்டாலின்' மரணமடைந்த பின்னர், கடற்கரையில் இரங்கல் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது, அப்போது ஒரு துண்டு சீட்டு கலைஞரிடம் கொடுக்கப்பட்டது. அந்த துண்டு சீட்டில், உங்களுக்கு மகன் பிறந்திருக்கிறான் என்ற செய்தி எழுதப்பட்டிருந்தது. அங்கேயே பெயர் சூட்டினார்கள். எனக்கு மகன் பிறந்திருக்கிறான். அந்த மகனுக்கு ஸ்டாலின் என்று பெயர் சூட்டுகிறேன் என்று கலைஞர் தெரிவித்திருந்தார்.




ராமநாதபுரம்:

# பெண் குழந்தையை பாதுகாப்போம்

சமூகத்தில் பெண் குழந்தைகளுக்கு சமஉரிமை, சம வாய்ப்பு அளிப்பதை உறுதி செய்யும் பொருட்டு ஆண்டுதோறும் ஜனவரி 24இல் 'தேசிய பெண் குழந்தைகள் தினம்' கொண்டாடப்படுகிறது.

இந்நாளில், பெண் குழந்தைகளை பாதுகாக்க பெற்றோர்கள், ஆசிரியர்கள், தன்னார்வலர்கள் என அனைவரும் அரசு குழந்தை பாதுகாப்பு மையங்களுடன் இணைந்து குழந்தை திருமணங்கள், பாலியல் வன்முறையை ஒழிக்க உறுதி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் குடும்ப வருமானத்திற்காக சிறுவர், சிறுமிகளை தங்களுடன் வேலைக்கு அழைத்து செல்கின்றனர். மைனர் பெண்களுக்கு கிராமப்புறங்களில் திருமணங்கள் அதிகமாக நடக்கிறது. பெண் குழந்தைகள் பாலியல் தொந்தரவுக்கு ஆளாகின்றனர் என்றும் கவனத்தில் கொள்ளப்பட்டது.

புதுடெல்லி

## அடுத்த ஜனாதிபதி யார்?

# தமிழகத்தை சேர்ந்தவருக்கு வாய்ப்பு




எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில், பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க), நிறுத்தும் வேட்பாளரின் வெற்றியை உறுதி செய்வதற்காக, பிரதமர் நரேந்திர மோடி தீவிரமாக உள்ளார்.

இதற்காக சில எதிர்க்கட்சிகளுடன் பா.ஜ.க மூத்த தலைவர்கள் பேசி வருகின்றனர். அனைவரும் ஏற்கக் கூடிய, பொதுவான ஒருவரை வேட்பாளராக நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்தவருக்கு இந்த வாய்ப்பு கிடைக்கும் என, பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.இந்த ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய பா.ஜ.க அரசாங்கத்துக்கு மிக முக்கியமான ஆண்டாக பார்க்கப்படுகிறது.

# கார் விபத்தில் சிக்கிய ஜாம்பவான்



ஹொலிவுட் ஜாம்பவான் நடிகரான அர்னால்ட் ஸ்வார்ஸ்னேக்கர் மோசமான கார் விபத்தில் சிக்கி, எந்தவித காயமும் இல்லாமல் உயிர் தப்பியிருக்கிறார்.

ஹொலிவுட் சினிமாவில் பல வெற்றித் திரைப்படங்களைக் கொடுத்த இவர், கடைசியாக 2019இல் வெளியான 'டெர்மினேட்டர் டார்க்பேட்' திரைப்படத்தில் நடித்திருந்தார்.

இந்தநிலையில் 74 வயதான நடிகர் அர்னால்ட், லொஸ்ஏஞ்சல்ஸ் நகரின் சன்செட் பவுல்வர்ட் பகுதியிலிருந்து அலென்ஃபோர்ட் அவென்யூவுக்கு தனது பெரிய காரில் சென்றுள்ளார்.

இந்தக் கார் வீதியில் சென்று கொண்டிருந்தபோது இவருக்கு முன்னால் இருந்த 2 வாகனங்கள் ஒன்றுக்கொன்று மோதிக்கொண்டன. இதனால் அர்னால்ட் வந்த காரும் நிலைதடுமாறி முன்னால் சென்று கொண்டிருந்த ஒரு சிறிய காரின் மீதேறி இருக்கிறது.

இந்த விபத்தில் நடிகர் அர்னால்ட்டுக்கு எந்த காயமும் ஏற்படவில்லை. ஆனால், அர்னால்ட் ஏற்றிய சிறிய காரில் இருந்து ஒரு பெண் தலையில் சிராய்ப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.



# ஒரே ஹோட்டலில் தனுஷ்-ஐஸ்வர்யா?

தனுஷ் மற்றும் ஐஸ்வர்யா ஆகிய இருவருமே ஐதராபாத் சென்று இருக்கும் நிலையில், ஒரே ஹோட்டலில் தங்கி இருப்பதாக வெளிவந்திருக்கும் செய்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

தனுஷ் மற்றும் ஐஸ்வர்யா திருமணமாகி 18 ஆண்டுகள் ஆகிய நிலையில், திடீரென இருவரும் பிரிய முடிவு செய்திருப்பதாக கடந்த 17ஆம் திகதி தங்கள் சமூக வலைதளங்கள் மூலம் அறிவித்தனர்.

இந்த நிலையில் '3', 'வை ராஜா வை' ஆகிய திரைப்படங்களை இயக்கிய ஐஸ்வர்யா அடுத்த படத்துக்கான படப்பிடிப்பு தொடங்குவதற்கான பணிகளுக்காக ஐதராபாத் சென்றுள்ளார்.

அதேபோல் தமிழ், தெலுங்கு மொழிகளில் உருவாகி வரும் 'வாத்தி' என்ற திரைப்படத்தில் நடித்து வரும் தனுஷ், ஹைதராபாத்தில் தான் படப்பிடிப்பில் உள்ளார்.

மேலும் தனுஷ், ஐஸ்வர்யா இருவருமே ராமோஜிராவ் பிலிம் சிட்டியில் தான் தங்கள் பணிகளை செய்துவரும் நிலையில், அங்குள்ள ஹோட்டலில்தான் இருவரும் தங்கியிருப்பதாக கூறப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்தார்களா என்ற தகவல் இல்லை.

புதுடெல்லி

## பா.ஜ.க அரசாங்கத்தின்

# பொருளாதார பெருந்தொற்று

## ராகுல்காந்தி கடும் விமர்சனம்



பொருளாதார பெருந்தொற்றுக்கு ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்தினர் உயிரிழந்து வருவதாக பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) அரசாங்கத்தை ராகுல்காந்தி கடுமையாக விமர்சித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது டுவிட்டரில், "பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே அதிகரித்து வரும் இடைவெளியை தோண்டி எடுத்த பெருமை மத்திய அரசையே சாரும்" என்று பதிவிட்டுள்ளார்.

மேலும், கடந்த ஐந்து ஆண்டுகளில், 20 சதவீத இந்திய ஏழை குடும்பங்களின் குடும்ப வருமானம் சுமார் 53 சதவீதம் குறைந்துள்ளது. இதேபோல், 20 சதவீதத்திற்கு கீழ் நடுத்தர மக்களின் குடும்ப வருமானமும் 32 சதவீதம் குறைந்துள்ளது.

இந்தச் அறிக்கையின்படி, கடந்த ஐந்து ஆண்டுகளில், நாட்டில் உள்ள 20 சதவீத பணக்காரர்களின் வருமானம், 39 சதவீதம் அதிகரித்துள்ளது என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

# மீண்டும் விஜய்-சிம்பு மோதல்?

கடந்த வருடம் பொங்கல் தினத்தில் விஜய் நடித்த 'மாஸ்டர்' மற்றும் சிம்பு நடித்த 'ஈஸ்வரன்' ஆகிய திரைப்படங்கள் ஒரே நாளில் வெளியாகியிருந்தன.

தற்போது, தளபதி விஜய் நடிப்பில் நெல்சன் இயக்கத்தில் உருவான 'பீஸ்ட்' திரைப்படத்தை வரும் ஏப்ரல் 14ஆம் திகதி தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் வெளியிட படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.



இந்த நிலையில் சிம்பு நடித்து வரும் 'வெந்து தணிந்தது காடு' என்ற திரைப்படத்தின் படப்பிடிப்பு இம்மாத இறுதிக்குள் முடிவடைந்து விடும் என்றும் ஏப்ரல் 14ஆம் திகதி ரிலீஸ் செய்யவுள்ளதாக தயாரிப்பாளர் ஐசரி கணேஷ் தெரிவித்துள்ளார்.



# ஒரே திரைப்படத்தில் மூன்று ஹீரோயின்கள்



நடிகர் விஜய் அன்டனி தற்போது 'தமிழரசன்', 'அக்னிசிறகுகள்', 'பிச்சைக்காரன் 2' 'கொலை' உட்பட ஒருசில திரைப்படங்களில் நடித்து வருகிறார்.

இந்த நிலையில் விஜய் அன்டனி நடிப்பில் சி.எஸ். அமுதன் இயக்கத்தில் உருவாகிவரும் திரைப்படத்துக்கு 'ரத்தம்' என தலைப்பு வைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, 'ரத்தம்' திரைப்படத்தில் மூன்று ஹீரோயின்கள் நடிக்க போவதாக இயக்குநர் சி.எஸ். அமுதன் தெரிவித்துள்ளார். ரம்யா நம்பீசன், நந்திதா ஸ்வேதா, மஹிமா நம்பியார் ஆகிய மூன்று ஹீரோயின்கள் நடிக்கின்றனர்.

திருச்சி

# குழந்தையை விற்று சூதாடிய தந்தை

நாடு முழுவதும் மக்கள் இணையத்தள சூதாட்டத்தில் இலட்சக்கணக்கில் பணம், நகை ஆகியவற்றை இழந்தது பெருமளவில் கடனுக்கும் ஆளாகி வருகின்றனர். பணத்தை இழந்த பலரும் தங்களது உயிரை மாய்த்துக் கொள்கின்றனர்.

திருச்சி, உறையூர் கீழ பாண்டமங்கலத்தில் உள்ளவர் அப்துல் சலாம். இவர் கடந்த சில மாதங்களாக சூதாட்டத்தின் மீது ஆர்வம் கொண்டவராகவும், பணத்தை செலவழித்து சூதாட்டத்தில் ஈடுபட்டு வந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில், தனது 2 மாத ஆண் குழந்தையை ரூ.80 ஆயிரத்திற்கு விற்று சூதாட்டத்தில் ஈடுபட்டதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. அந்த முறைப்பாட்டின் பிரகாரம் குழந்தையின் தந்தையை கைது செய்த பொலிஸார், மற்றுமொருவரையும் கைது செய்துள்ளனர்.



ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில்

# இந்தியாவை வெள்ளையடித்த தென்னாபிரிக்கா

ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் இந்தியாவை தென்னாபிரிக்கா வெள்ளையடித்துள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், முதலிரண்டு போட்டிகளிலும் வென்றிருந்த தென்னாபிரிக்கா, கேப் டௌணில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மூன்றாவது போட்டியிலும் வென்றமையைத் தொடர்ந்தே 3–0 என இந்தியாவை வெள்ளையடித்துள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

தென்னாபிரிக்கா: 287/10 (49.5 ஓவ.) (துடுப்பாட்டம்: குயின்டன் டி கொக் 124 (130), றஸி வான் டர் டுஸன் 52 (59), டேவிட் மில்லர் 39 (38), டுவைன் பிறிட்டோறியஸ் 20 (25) ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரசீத் கிருஷ்ணா 3/59 [9.5], ஜஸ்பிறிட் பும்ரா 2/52 [10], தீபக் சஹர் 2/53 [8], யுஸ்வேந்திர சஹால் 1/47 [9], ஜெயந்த் யாதவ் 0/53 [10])

இந்தியா: 283/10 (49.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: விராட் கோலி 65 (84), ஷிகர் தவான் 61 (73), தீபக் சஹர் 54 (34), சூரியகுமார் யாதவ் 39 (32), ஷ்ரேயாஸ் ஐயர் 26 (34) ஓட்டங்கள். பந்துவீச்சு: லுங்கி என்கிடி 3/58 [10], அன்டிலி பெக்லுவாயோ 3/40 [7], டுவைன் பிறிட்டோறியஸ் 2/54 [9.2], கேஷவ் மஹராஜ் 1/39 [10], சிஸன்டா மகலா 1/69 [10])

போட்டியின் நாயகன்: குயின்டன் டி கொக்

தொடரின் நாயகன்: குயின்டன் டி கொக்



இரண்டாவது இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டியில்

## மேற்கிந்தியத் தீவுகளை மயிரிழையில் வென்ற இங்கிலாந்து

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரில், பார்படோஸில் நேற்று அதிகாலை இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் இங்கிலாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மேற்கிந்தியத் தீவுகள்

இங்கிலாந்து: 171/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜேஸன் றோய் 45 (31), கிறிஸ் ஜோர்டான் 27 (15), மொயின் அலி 31 (24), டொம் பன்டன் 25 (18) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேஸன் ஹோல்டர் 2/25 [4], அகீல் ஹொஸைன் 1/15 [3], ஷெல்டன் கோட்ரல் 1/23 [3], கெரான் பொலார்ட் 1/32 [4])

மேற்கிந்தியத் தீவுகள்: 170/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: றொமாரியோ ஷெப்பர்ட் ஆ.இ 44 (28), அகீல் ஹொஸைன் ஆ.இ 44 (16), நிக்கலஸ் பூரான் 24 (22), டரன் பிராவோ 23 (20) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொயின் அலி 3/24 [4], அடில் ரஷீட் 2/24 [4], றீஸ் டொப்லி 1/18 [4])

போட்டியின் நாயகன்: மொயின் அலி




## பொதுநலவாய பெண்களின் கிரிக்கெட் தொடரில் இலங்கை

பொதுநலவாய பெண்களின் கிரிக்கெட் தொடருக்கு இலங்கை தகுதி பெற்றுள்ளது.

மலேஷியாவின் கோலாலம்பூரில் நேற்று நடைபெற்ற பங்களாதேஷுடனான தகுதி காண் போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே பிரதான தொடருக்கு இலங்கை தகுதி பெற்றுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 136/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: சாமரி அத்தப்பத்து 48 (28), நிலக்ஷி டி சில்வா 28 (25), அனுஷ்கா சஞ்ஜீவனி ஆ.இ 20 (16), ஹர்ஷிதா மாதவி 19 (22) ஓட்டங்கள். பந்துவீச்சு: நஹிடா அக்தர் 2/34 [4], ருமானா அஹ்மட் 1/33 [4], சுரையா அஸ்மின் 1/12 [2], சல்மா காட்டூன் 1/14 [4], சஞ்ஜிடா அக்தர் மேக்லா 0/17 [3], றிட்டு மோனி 0/23 [3])

பங்களாதேஷ்: 114/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: பர்கானா ஹொக் 33 (39), முர்ஷிடா காட்டூன் 36 (36), நிகர் சுல்தானா 20 (21) ஓட்டங்கள். பந்துவீச்சு: சாமரி அத்தப்பத்து 3/17 [4], சஷினி நிஸன்ஸலா 0/17 [4], இனோகா றணவீர 0/22 [4], கவிஷ டில்ஹாரி 0/21 [4], அமா காஞ்சனா 1/13 [2])

தொடரின் நாயகி: சாமரி அத்தப்பத்து



கல்முனை ஹொலிபீல்ட் விளையாட்டுக் கழக

## 26 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்

■ நூருல் ஹுதா உமர், அஸ்ஹர் இப்றாஹீம்

கல்முனை பிரதேசத்தின் மூத்த கழகங்களில் ஒன்றான கல்முனை ஹொலிபீல்ட் விளையாட்டு கழகத்தின் 26ஆவது வருடாந்த பொதுகூட்டமும், நடப்பாண்டுக்கான புதிய நிர்வாக தெரிவும் சமாதான கற்கைகள் நிலைய சாம்மாந்துறை வளாகத்தில், கழக செயலாளர் பேராசிரியர் கலாநிதி எஸ். எல். றியாஸின் நெறிப்படுத்தலில் கழகத் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எம். ஜெஸ்மின் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்தப் பொதுகூட்டத்தில் கடந்தாண்டின் இறுதி கூட்டத்தின் கூட்டறிக்கை மற்றும் கணக்கறிக்கை விடயங்கள் என்பன எடுத்துரைக்கப்பட்டு சபையோரின் அங்கிகாரம் பெறப்பட்டதுடன் ஹொலிபீல்ட விளையாட்டு கழகம் 26 ஆண்டுகள் கடந்து வந்த பாதைகள் தொடர்பிலும், கடந்த கால செயற்பாடுகள் தொடர்பிலும் கழக நிர்வாகிகளால் நினைவு உரைகள் நிகழ்த்தப்பட்டன.

கழகத்தின் கால் நூற்றாண்டு விழா நிகழ்வுகளை பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்துவது தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டதுடன் மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் அறிவிப்பாளர் ஏ.ஆர்.எம். ஜிப்ரி தொடர்பிலுமான விடயங்கள் இங்கு ஆராயப்பட்டதுடன், சாதனையார்களின் கௌரவிப்புகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகம். தெரிவு செய்யப்பட்டது.

அந்த வகையில் புதிய நிர்வாகத் தலைவராக மீண்டும் ஜெஸ்மின், செயலாளராக பேராசிரியர் கலாநிதி எஸ்.எல். றியாஸ், பொருளாளராக எம்.எச்.எம். ஹனீஃப் ஆகியோரும் தவிசாளராக சமீர் ஜுனூஸ், பிரதி தவிசாளராக யூ.எல்.எம். றியாஸ், உபசெயலாளராக பஸ்மி காசிம், கலாசார செயலாளராக மௌலவி சபா முஹம்மத் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

பிரித்தானியா

முஸ்லிம் என்பதால் பதவியை பறித்துவிட்டார்கள்;

# பெண் எம்.பி குற்றச்சாட்டு

“முஸ்லிம் என்பதால் பதவியை பறித்துவிட்டார்கள்” என பிரித்தானியாவின் ஆளும் கட்சியான, கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த பெண் பாராளுமன்ற உறுப்பினரான நுஸ்ரத் கனி பரபரப்பு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: “கடந்த 2018 ஆம் வருடத்தில் முன்னாள் பிரதமர் தெரசா மே பதவியில் இருந்த போது, போக்குவரத்து துறைக்கான இணை அமைச்சராக இருந்தேன். அதன்பிறகு 2020 ஆம் வருடம் பெப்ரவரி மாதத்தில் பிரதமர் போரிஸ் ஜோன்சன் பதவியேற்றவுடன் அமைச்சரவையில் மாற்றம் ஏற்பட்டது.

அப்போது என் பதவியை பறித்துவிட்டனர். அதற்கு பிறகு நடைபெற்ற கூட்டத்தில் கட்சி கொறடாவிடம் இதுபற்றி விளக்கம் கேட்டேன். அவர், அமைச்சரவை மாற்றப்பட்டதற்கான உயர்மட்டக் கூட்டத்தில் நான் முஸ்லிம் என்பது ஒரு காரணமாக கூறப்பட்டதாக தெரிவித்தார். இது ஏற்றுக்கொள்ள முடியாதது.

இதனால் கட்சியின் மீதுள்ள நம்பிக்கையை இழந்து விட்டேன். இப்பிரச்சினையை வெளியில் கூறினால், என் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் உண்டாகும் என்பதால் தான் இதனை கூறவில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

இந்நிலையில் அவரது குற்றச்சாட்டானது பிரித்தானியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.





டுபாய்

## பூச்சியை வைத்து இறப்பைக் கணிக்கும் அதிகாரிகள்

மர்மமான முறையில் உயிரிழந்த ஒருவரின் சடலத்திலிருந்து எடுக்கப்பட்ட பூச்சி, புழுக்களை வைத்து அவர் இறந்த நேரம் துல்லியமாகக் கணிக்கப்பட்ட சம்பவம் டுபாயில் இடம்பெற்றுள்ளது.

டுபாயில் மனித நடமாட்டம் இல்லாத கட்டடமொன்றில் இருந்து அண்மையில் பொலிஸார் சடலம் ஒன்றை எடுத்துள்ளனர். இந்நிலையில் குறித்த சடலத்தில் தோன்றிய பூச்சி, புழுக்களை ஆய்வு செய்து, அந்நபர் இறந்த நேரத்தை அதிகாரிகள் துல்லியமாக கண்டுபிடித்துள்ளார்கள்.

இதுகுறித்து டுபாய் பொலிஸ் துறையின் தடயம் மற்றும் குற்றவியல் இயக்குநரான அஹமத் கூறியதாவது: “சடலமொன்றில் முதன்முதலாக தோன்றும் லார்வா எனப்படும் சிறிய புழுவையோ அல்லது முழுவதுமாக உருமாற்றம் பெற்ற பூச்சிகளையோ எடுத்து ஆய்வு செய்யும்போது, அவர் எப்போது உயிரிழந்துள்ளார் என்று துல்லியமாகக் கணிக்க முடியும்” எனத் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல்

## 4 ஆம் கட்டத் தடுப்பூசியால் நன்மை

இஸ்ரேலில் செலுத்தப்பட்டு வரும் 4ஆம் கட்ட கொரோனாத் தடுப்பூசி, 60 வயதுக்கு மேற்பட்டோரிடையே நோய் எதிர்ப்புச் சக்தியைக் அதிகரிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4ஆம் கட்ட கொரோனாத் தடுப்பூசி குறித்து அந்நாட்டிலுள்ள பிரபல பல்கலைக்கழகங்கள் இணைந்து மேற்கொண்ட ஆய்விலேயே இத் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் முதலாம் கட்டத் தடுப்பூசியைச் செலுத்திக் கொண்டவர்களை விட இரண்டாம் கட்டத் தடுப்பூசியை செலுத்திக் கொண்டோரிடையே நோய் எதிர்ப்பு சக்தியானது இரு மடங்கு அதிகரித்து உள்ளது என்றும் அந்நாட்டின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.



சீனா

ஒரு மாதத்துக்கு விதிக்கப்பட்ட

## ஊரடங்கு இரத்து




சீனாவிலுள்ள சியான் நகரில் ஒரு மாதத்துக்கு விதிக்கப்பட்டிருந்த ஊரடங்கு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் பெய்ஜிங் நகரில் குளிர்கால ஒலிம்பிக் போட்டி கடும் விதிமுறைகளுக்கு மத்தியில் நடைபெறவுள்ளது. இந்நிலையில் அங்கு கொரோனாத் தொற்றுப் பரவலானது குறைவடைந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

இதனையடுத்து அங்கு ஒரு மாதத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த ஊரடங்கு இரத்து செய்யப்படுவதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

மேலும் பெய்ஜிங் மாகாணத்தில் இருக்கும் இரண்டு மில்லியன் மக்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ளும் வீரர்கள், அதிகாரிகள், செய்தியாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டு இருக்கின்றனர். அத்துடன் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கவுள்ள விளையாட்டு வீரர்கள், ஊழியர்களும் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

மனித மூளையை

## கட்டுப்படுத்தும் ‘சிப்’



அண்மைக்காலமாக மனித மூளைகளோடு தொழில்நுட்பத்தை இணைக்க உலகளவில் பல்வேறு ஆராய்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் உலக பணக்காரர்களில் ஒருவரும் டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகரும், அதன் தலைமை நிர்வாக அதிகாரியுமான எலான் மஸ்க்கை மனித மூளையை ‘சிப்’ மூலம் கட்டுப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இது குறித்த பரிசோதனையை எலான் மஸ்கின் ‘நியூராலிங்க்’ நிறுவனம் விரைவில் தொடங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தொழில்நுட்பத்தின் மூலம் மனித மூளையில் ஒரு சிறிய ‘சிப்’ பொருத்தப்படுவதோடு அச் சிப்பின் செயற்பாடுகளை கணினி, திறன்பேசி போன்ற சாதனங்களுடன் இணைக்கப்படவுள்ளதாகவும் இதன் மூலம் குறித்த சாதனங்களை தொடாமலேயே நினைவுகள் வாயிலாக இயக்க முடியும் எனவும், மனித மூளை என்ன நினைக்கிறது என்பதையும் அச்சாதனங்களில் பதிவு செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இச்சிப்பின் மூலம் மனித மூளையில் ஏற்படும் முடக்குவாதம், நரம்பியல் பிரச்சினைகள், பாதிப்புகள் குறித்து சரி செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 25 ஜனவரி 2022, இல. 08, ஹுணுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.